www.akaram.eu

# AKARAM அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.01 திருவள்ளுவர் ஆண்டு 2053 | 14.08.2022 - 13.09.2022 | ISSN : 2195-6480



12 அகரம் ஆண்டு

## இரணில் இரட்சகனா இரணியனா

## என்று முடியும் உக்ரைன் யுத்தம்?

## சாத்தியமேயில்லா ஆட்சி ஏற்பாடுகள்

FREE Magazine


Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS
BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
~~149€~~
பெறுமதியுள்ள
V BOX
119€*
கிடைக்கும்
மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS
Haldiram's
Aachi
The Mother of Good Taste
Elephant House
GRB
TRS
Tilda
Legendary Rice
Maliban
MTR
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de




ortel MOBILE




## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to 20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat

Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play | App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus

AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14 ஆவணி 2022 - 13 புரட்டாசி 2022
சுவடி / ISSUE 10.01

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**
**Tel: 00 49 176 47 11 87 11**
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் நன்றியும், வளமான, நலமான வாழ்வும் கிடைக்க அகரம் இறைவனை இறைஞ்சுகிறது.**




இலங்கையில் நாட்டை நாசமாக்கிய பேய் பிசாசுகளை விரட்டுவதில் ஓரளவு வெற்றி கண்டு விட்டார்கள். அதன் பயனாக மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டபாய ராஜபக்ஷகளின் குடும்பங்கள் வெளி நாடுகளிலும், சிலர் அடையாளம் தெரியாத இடங்களில் உள் நாட்டிலும் ஒளிந்து வாழ்கிறார்கள்.

அறகலிய எனச் சிங்கள மக்களாலும், பொது ஊடகங்களிலும் கூறப்பட்டு வந்த மார்ச் 09, 2022இல் உருவான சிங்கள மக்களின் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் புரட்சி, ஜனாதிபதி மாளிகை பிரதமரின் அலரி மாளிகை அம்பாந்தோட்டையில் உள்ள ஸ்ரீமா அரசில் அமைச்சராக அரசியலில் இறங்கிய சாமல் ராஜபக்ஷவின் சிலை மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தவர்கள், அவர்களின் உறவினர், உதவியாளர்கள் பலரின் ஆடம்பர மாளிகைகள், வீடுகளை மக்கள் தீ இட்டு எரித்த பாரிய காட்சிகள் மக்களின் கோபத்தின் அளவை வெளிப்படுத்தின.

அந்த அளவுக்கு நாட்டில் பணத் தட்டுப்பாடு, அன்றாட அவசிய பொருட்களின் விலைகள் மக்களால் முற்றும் முடியாத சுமையை

ஏற்படுத்தியதால் இந்த மக்கள் புரட்சி வெடித்தது. போராட்டக்காரர்கள் வடக்கு-கிழக்கு தவிர்ந்த தமிழ் மக்கள் தவிர்ந்த சாதாரண பெரும்பாலான சிங்களவர்கள் என்பதால், ஆட்சியாளரால் தொடக்கத்தில் சிங்கள அரச படைகளை ஈடுபடுத்தி, வன்முறைகளைப் பயன்படுத்தி அடக்கத் துணியவில்லை. அப்படியிருந்தும் வானத்தை நோக்கிய படைகளின் துப்பாக்கிச் சூடுகளும், நீர்த்தாரை இராணுவ விமான மிரட்டல்களும், போராட்டக் காரர்களின் தாக்குதலை அதிகமாக்கின.

நாட்கள் செல்லச் செல்ல நயவஞ்சக ஆட்சியாளர் தம்மைச் சுதாரித்து, ஆளை மாற்றி, ஆட்சியை மாற்றி விட்டதாக மக்களை ஏமாற்றும் திட்டங்களில் இறங்கினார்கள். இந்த நாடு இந்த நிலைக்கு வர வைத்த பெருமை, நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் ஆட்சி செய்தவர்களில் டபிள்யு. திசநாயக்கா தவிர, மற்ற எல்லாரும் காரணமானவர்களே!. எங்கள் தமிழ்த் தலைவர்கள் உட்பட. அவர்கள் தக்கத் தருணத்தில் நீதிமன்ற மற்றும் பாராளுமன்ற நடைமுறைகளைப் பயன்படுத்தி, ஆட்சியாளரின் அடாவடிகளைத் தடுக்கத் தவறி விட்டார்கள் என்பதும், வெளிநாடுகளின் கூலிப்படை அரசியலைச் செய்து நாட்டையும், நம்பி வாக்களித்த மக்களையும் நாசப்படுத்தினார்கள் என்பதே நாட்டின் கடந்த 100 ஆண்டு வரலாற்று உண்மைகள் என்பதை, யாராலும் மறுக்க முடியாது.

இப்பொழுதும் திருட்டு அரசியல்வாதிகளின் சதிகார அரசியல் மீண்டும் அரங்கேறியது. மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டபாயா ராஜபக்ஷ குடும்பங்கள் கூட்டாளிகளை மட்டும் கொடியவர்களாக விரட்டப் பட்ட பின்னர், அவர்களுக்குச் சற்றும் குறைவில்லாத குற்றவாளிகளான ரணில் விக்கிரம சிங்க போன்றோர் அதிகாரப் பீடத்தில் அமரத் தலைப்பட்டனர்.

அதிலும் ரணில் விக்ரமசிங்கவும் அவரது சொந்த தொகுதி வாக்காளர்களாலே தோற்கடிக்கப்பட்டு, கட்சிக்குக் கிடைத்த மொத்த விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பா.உ.பதவி பெற்றவர். அப்படிப் பட்டவரைப் பிரதமர் பதவியில் அமர்த்த எல்லா பா.உ.களும் ஆதரவளித்தனர். அதன் பின்னர் ஜனாதிபதி கோட்டபாயாபவை நாட்டை விட்டு ஓட வைத்து, பதவியை விலக வைத்து, அவரின் பதவியில் எந்த விதத்திலும் பதவி வகிக்க தகுதி இல்லாத ரணிலை, நாட்டின் ஜனாதிபதி ஆக்கிவிட்டனர் பாராளுமன்ற உறுப்பினர்கள். இவர்களில் பலரது இல்லங்களை மக்களே தீ இட்டுக் கொளுத்தியப் பெருமை பெற்றவர்கள்.

அமைச்சு மற்றும் அரச பதவிகள், பணப் பெட்டிகள் அள்ளி வீசப்பட்ட செய்திகளின் மத்தியில் ரணிலின் ஜனாதிபதி அதிகாரத்தில் 'கோட்டா கோ கம' என்கிற மக்கள் போராட்டம் சிதைக்கப்பட்டு, கைதுகளும், காணாமல் ஆக்கப்படுதலும் வெளிநாடுகளில் வேலை வசதி வாய்ப்புகள் என போராட்டக்காரர்கள் வெளியேற்றப் படுவதும், சிலர் மீது வழக்குகள், சிறைகள் என பழிவாங்குதல் தொடருகிறது.

போராட்டம் நிச்சயம் தொடரும் என்கிற மரண ஓலங்கள் ஒலிக்கின்றன. ஆனால், திருடர்களின் ஆட்சித் தொடர இந்தியா, அமெரிக்கா, சீனா மற்றும் அதானி, அம்பானி போன்ற சர்வதேச கூட்டணி ரணிலை அல்லது அவர் போன்ற ஒரு நரியிடம் எல்லா வசதிகளும் ஒப்படைக்கப்படும்.

சீனாவின் கடற்படை கப்பல் விவகாரம் இப்பொழுது பூதாகாரமாக பேசப் பட்டாலும், எல்லாம் புஸ்வாணமாகி விரைவில் மாற்றம் காணலாம். ஆனால் இலங்கையையும், இலங்கை மக்களையும் பாதித்துள்ள சர்வதேச ஏழரை நாட்டுச் சனி தொலையவே தொலையாது.

மீண்டும் வரும் வரை விடை பெறும்...

**ஆசிரியர்,** அகரம் குழுமம்



த. எதிர்மன்னசிங்கம்

## மக்களுக்கு மாற்றமா? ஏமாற்றமா?

# இரணில் இரட்சகனா இரணியனா?

“கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது” என ஒரு பழந்தமிழ் மொழி வழக்கு இருப்பதை நாம் எல்லாம் அறிவோம். அப்படியான ஒரு நிலைதான் கடந்த சில மாதங்களாகச் சிங்களப் பௌத்த மக்கள் நடத்திய ‘கோட்டா கோ கம’ ‘கோட்டாவே ஜனாதிபதி பதவியை விட்டு ஓடி விடு’ எனச் சிங்கள மக்களாலும், ஊடகங்களாலும் அழைக்கப்பட்ட மக்கள் புரட்சி மார்ச் 09, 2022இல் உருவாகியப் புரட்சி ஏற்படுத்தியது.




இலங்கை அரசியலில் கடந்த 70 வருடங்களுக்கும் அதிகமாக தென் இலங்கைச் சிங்கள மக்களின் மிக முக்கியமான பங்களிப்பை இராசபக்ஷ குடும்பம் ஸ்ரீரீமா ஆட்சிக் காலத்தில் இருந்தே வழங்கிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. அதனைச் சாதகமாக்கி, மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற அரசியலில் இடம் பிடித்துக் கொண்டார்.

மனித உரிமை விடயங்களே ஜே.வி.பி. புரட்சிக் காலத்தில் அவரது அரசியல் உயர்ச்சிக்குக் காரணமாயின. ஆனால், அவரது தனிப்பட்ட வாழ்வில் மந்திரம், தந்திரம், கொலை, கொள்ளைகள் இடம் பிடிக்கவே, அவர் தம் அரசியல் வழியைப் புதிய வடிவத்தில் சமைத்துக் கொண்டார்.



அடிக்கடி கொச்சைத் தமிழில் பேசியும் தமக்கும், தமிழருக்கும் உள்ள உறவு முறைகளைச் சொல்லியும், தம்மை தமிழரின் நண்பராகக் காட்டியும் வந்துள்ளார். அவருக்கு முன்னோடியாகத் திகழ்ந்த சந்திரிகா குமாரணதுங்க கணவன் விஜய குமாரணதுங்கவின் சினிமா பிரபலத்தையும், அவருடைய புலிகள் ஆதரவு அரசியல் நகர்வுகளையும், அவற்றுக்குப் புலிகள் இயக்கமும், தமிழ் மக்களும் வழங்கிய அமோக அரசியல் ஆதரவால் இரண்டு தடவைகள் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

ஜனாதபதி ஆனதும் அவரது ஆட்சியும், ஆணவமும் தமிழ் மக்களைக் கொன்று ஒழிப்பதில் ஆர்வம் காட்டிய அளவுக்கு ஆதரவளித்த தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகங்களையும், இராணுவ அடக்கு முறைகளையும் வகை தொகை இன்றி நடத்தி முடித்தார். அத்தகைய சந்திரிகாவோடு நீலன் திருச் செல்வமும், சம்பந்தன், சுமந்திரன் கூட்டமும் கூடிக் குலாவுவதை இன்றும் காண முடிகிறது.

இப்படியான கறுப்பாடுகளைத்தான் தமிழ் இனம் தமது அரசியல் தலைவர்களாக் கடந்த 74 ஆண்டுகளாகக் கட்டி அழுது, அழிந்து வருகிறது. இவர்கள் ஒரு காலத்திலும் நாட்டுக்கும், வாக்களித்த மக்களுக்கும் விசுவாசமாக நடந்து கொண்டது இல்லை. பிற நாடுகளின் கைக் கூலிகளாகவும், அந்த நாடுகளின் அரசியல், இராணுவ பொருண்மிய நலன்கள் சார்ந்த அரசியலையே செய்கிறார்கள் என்பதை, முள்ளி வாய்க்கால் தமிழின அழிப்பிலும், அதன் பின்னரும் நாம் காணும் அவர்களின் அரசியல் காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன.




சிங்களப் பொது மக்கள் இந்த அளவுக்குப் புரட்சிப் போர் நடத்திய பின்னரும், இவர்களின் ஆதரவு ரணிலையும், மகிந்த கோத்த பாயா, சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனா, இந்தியா, அமெரிக்கா போன்ற தமிழினப் பகைமை நாடுகளின் ஆதரவாளர்களாகவே உள்ளனர். இத்தனை வருடங்களாகப் பயங்கரவாதத் தடைச் சட்ட விதிகளின் கீழ் தடுப்புச் சிறையில் தவிக்கும் தமிழ் மக்களை விடுவிக்க, ஆண்மையற்ற இவர்களால் இன்றைய இலங்கை அரசியலில் தமிழ் மக்களுக்கானத் தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என எப்படி நம்புவது?. சுமந்திரன், சாணக்கியன், அடைக்கலநாதன், சிறீதரன் பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் போல அவ்வப்பொழுது கூச்சலிட்டு கத்துவதும், சமபந்தன் பாதம் பருப்பை அரைப்பதும், தமிழருக்கு விடியலைத் தரும் என இன்னமும் பேசிவரும் எத்தர்களின் பேச்சால் யாருக்கு என்ன பயன்?

சிங்கள மக்கள் 4 மாதங்களாகப்



போராடி மகிந்த கோத்த பாயா குடும்பத்தை ஓடவைத்த நிலையில், அவர்களின் கூட்டாளியும் அவர்களை விடவும் மோசமான அரசியல் செய்து, எந்தத் தொகுதி வாக்காளரின் ஆதரவையும் பெறத் தவறிய மிக மோசமான, பயங்கரமான சிங்கள இனவாத அரசியலைச் செய்து வரும் ரணில், இன்று நாட்டின் ஜனாதிபதியான இரகசியம் என்ன? இந்த அரசியல் நகர்வில் இந்திய, அமெரிக்க, சீன அரசுகளின் நலன்களும், எங்கள் தமிழ் தலைவர்களின் பங்களிப்பும் உலகம் அறிந்த உண்மைகள்.

குறுக்கு வழியில் ஜனாதிபதிப் பதவியைப் பிடித்துள்ள ரணில் விக்கிரமசிங்க ஊழல், கொள்ளை, அரச நிதித் திருட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல சிங்கள ஜே.வி.பி. இளைஞர்களைச் சித்திரவதைச் செய்து கொன்றொழிக்க இரகசிய தடை முகாம்களை அரசின் சார்பில் நிர்வகித்தவர் என அண்மையில் வெளியான வாக்கு மூலப் பிரமானங்கள் தெரிவித்துள்ளன. இப்படிப்பட்டவர்தான் கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரதேசங்களில் 1,000 புத்த விகாரைகளைக் கட்டுவேன் எனக் கூறி, தமிழர் கோயில்களில் எல்லாம் புத்த விகாரைகளையும், பிக்குகளையும் குடியமர்த்தப்படும் அவலம் நிகழ்கிறது.

இன்று மக்கள் புரட்சியில் பங்கெடுத்தவர்களை ரணில் அரசு தேடிப் பிடித்து தண்டித்தும், மற்றவர்களை வேலை தேடி வெளிநாடுகளுக்கு ஓட வைத்தும், மக்களின் போராட்டத்தை முற்றாகச் சிதைக்கும் பணியில் இறங்கி உள்ளது. இதன் மூலம் இது போன்ற மக்கள் நலப் போராட்டங்கள் இலங்கையில் இடம் பெறக் கூடாது என்பதில் எச்சரிக்கை கொண்டு விட்டது.

இந்தப் பிராந்தியத்திலேயே அனுமதிக்கக் கூடாது என்பதையே போராட்டக்காரர்களை அமெரிக்க கடற்கரை கண்காணிப்பு விமானத்தை இலங்கைப் படைகள் மக்கள் மீது பறக்க விட்டும் இராணுவம், காவல்துறை சிறப்புப் படை அணிகளைக் கொண்டு புரட்சியை அடக்கினார். தொடக்கத்தில் மக்களுக்காகப் பேசியவர் பின்னர் மதகிந்தரை ஓட வைத்து, கோட்டாவுடன் இணைந்து இப்போ கோட்டாவை ஓட





வைத்து, தாமே அதிபராகி விட்டார்.

இதற்காகப் பல அரசுப் பதவிகளும், பணப் பெட்டிகளும் கைமாறின. அதில் எமது பத்துத் தலைகளும் அடக்கம் என்கின்றன சில செய்திகள். இவர்கள் பல தடவைகள் இந்திய அரசிடம் வாங்கிய பெட்டிகள் மற்றும் அதிகாரிகளின் ஆதரவால், பாராளுமன்ற தேர்தல் வெற்றிகளைப் பெற்றனர் என்பது பகிரங்க இரகசியம். ரணில் அமெரிக்க ஆதரவு என்பதால், இந்தியா சார்பாக எதிரிகள் போல ரணில் வெளியில் காண்பித்து வருகிறார்கள். இதைப் பற்றிய ஒரு அரசியல் விமர்சனம் இப்படிக் குறிப்பிடுகிறது:-

இன்று போராட்டம் முனை மழுங்கி விட்டாலும், எல்லாமே தொலைந்து விட்டது எனச் சொல்ல முடியாது. ரணிலும், அவருடைய அணியினரும் இந்தக் கொந்தளிப்பைக் கடந்து சென்று விடுவார்கள் என்பதால் அல்ல, ஆனால், தமது தேசம் என நினைக்கும் இந்நாட்டு மக்கள் ஒரு தீர்க்கமான முடிவு தேட முனைவார்கள். தங்களின் நாட்டைத் தாங்களே காப்பாற்ற முடியும் என்பதால். எனவே எல்லாம் முடிந்து விட்டது எனச் சொல்ல முடியாது.

எல்லாம் முடிந்து விட்ட நிலையில், எங்கள் மக்கள் மேலும் உறுதியுடனும், எழுச்சியுடனும் மாற்று வழிகளைத் தேடுவார்கள். எல்லாமே சிதைந்து வானளாவ துர்நாற்றம் வீசும் அளவுக்கு எல்லாமே அழுகிய நிலையில், அவர்கள் புதிய சொர்க்கத்தைத் தேடாமல் தமக்கான நியாயமான இடத்தையும், ஒரு சிறிய வளர்ச்சியையும் நோக்கிச் செல்வார்கள்.

அரசு என்ன செய்கிறது? என அறியாமல் செயற்பட்டது. நிதி அமைச்சர் பசில் அரசு



கடன் தந்தவர்களின் ஆதரவைக் கேட்பதாகச் சொல்கிறார். ஆனால் மத்திய வங்கி ஆளுநரோ, சர்வதேச ஊடகங்களில் சர்வதேச நிதி நிறுவனத்திடம் மண்டியிடத் தேவை இல்லை என்கிறார். சுயாதீனமான பொருளியல் வல்லுநரும், எதிர்க் கட்சிகளும் உள்ளக தீர்வுகளால் சரி செய்ய முடியாது, உடனடி கடனுதவி அவசியம் என்கின்றனர். 2020 நவம்பர் தொடக்கம் சர்வதேச நிதி நிறுவனத்தை நாட வேண்டும் எனச் சொல்லி வருகிறேன். எனவே, இந்தக் கடன் சுமை செயற்கையாக உருவாக்கப் பட்டது.

வரி விலக்கால் இலங்கை ரூபாயில் 600 பில்லியன் இழப்பு ஏற்பட்டதும், செயற்கை உரத் திடீர் தடையால் நாட்டின் நிதி நிலைமையை மோசமாக்கி விட்டன. தொடக்கத்தில் ஆட்சியாளர், தமது அரசியல் நடவடிக்கைகளுக்காகக் காகித நாணயங்களை அச்சடிக்க, ஏற்கனவே உருவாகிவிட்ட உயர் பணவீக்கம் அதற்குத் தடையாக இருந்தது.

பின்னர் அரசின் மக்களின் நிதிகளான ஈ.பி.எஃப்., ஈ.ரி.எஃப். நிதிகளிலிருந்து 100 பில்லியனை எடுத்து, தமது உள்ளட்சி உறுப்பினர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினர். அவர்களிடம் கடுகு அளவாவது கண்ணியம் இருந்தால், தேர்தல் செலவினத்தைத் தவிர்த்தும், முக்கியமாக ஊழல் மூலம் பணத்தை இழக்காமல், சிறிதளவு பணம் என்றாலும் மிஞ்சியிருக்கும். மேலும் எமது ஆயத்த ஆடை ஏற்றுமதிக்குக் கிடைத்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகையும் இழந்த நிலை.

இப்பொழுது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருடக் குத்தகைக்குச் சீனாவிடம் கொடுத்தவர் ரணில் என்பதால், சீனாவின் கடற்படை, உளவுக் கப்பலின் வருகை இந்திய, அமெரிக்க நெருக்குதலுக்கும், சீனாவின் கோபத்துக்கும் பதில் தேட வேண்டியவராக உள்ளார். அதில் எவருடைய தலை உருளப் போகிறது என்பதே வினா?

1959இல் பண்டாவின் தலை உருண்டதற்கும், அமெரிக்காவின் கோபமே பின்புலக் காரணியாக இருந்தது. இன்று நிலைமை முற்றிலும் மாறாக உள்ளது. ஆட்டம் மும்முரமாக உள்ளது. ஆகட்டும் பார்க்கலாம். ஆட்டத்தின் முடிவிலே.





BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
Flugtickete und hotel kann man auch hier buchen
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
एअर इंडिया
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com



இலட்சுமணன்

# சாத்தியமேயில்லா ஆட்சி ஏற்பாடுகள்



மஹிந்த, கோட்டா யுகம் முடிந்து விட்டதாக எண்ணத் தலைப்பட்டாலும், அது நடக்காது என்றே நம்பிக் கொள்ள வேண்டும். சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்து விட்டால், இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை, அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து விடலாம் என்றுதான் எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அது இன்னமும் கைகூடவில்லை. சாத்தியப்பட வாய்ப்பேயில்லை என்பதனையே அண்மைய சம்பவங்கள் காட்டுகின்றன.

தாம் சர்வகட்சி அரசொன்றை உருவாக்கப் போவதாகவும், அதில் இணையுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார். ஆனால், ஒரு சில கட்சிகள் இணைந்து கொண்டாலும், எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரிவினர் அதில் சாதகமான சமிக்ஞையைக் காட்டவேயில்லை. இக் கட்டுரை எழுதப்படும் வரை ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையிலான சந்திப்பில் இணக்கப்பாடு ஏற்படவில்லை. ஜனாதிபதியின் சர்வகட்சி அரசாங்கம் என்ற எண்ணக்கரு மற்றும் அவரது அழைப்பும் அரசியல் கட்சிகளுக்கு இடையேயும், அரசியல்வாதிகளுக்கு இடையேயும் பல்வேறு வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது என்று மாத்திரமே சொல்லிக் கொள்ள முடிகிறது அவ்வளவுதான்.

தமிழர் தரப்பினைப் பொறுத்த வரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார். அதே போன்று சீ. வி. விக்னேஸ்வரனும் இணையலாம்.

ஏனைய தரப்புகளைப் பொறுத்தமட்டில் முடிவுகளைச் சொல்ல முடியாதுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க சிங்கள மக்களின் துரோகி என்று பார்க்கப்பட்டதற்கு புலிகள் இருக்கும் போது காரணம் சொல்லப்பட்டது. இருந்தாலும், இப்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உள்ளிட்டோரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி அனுமதியளிக்கும் நிலைமையும் உருவாகியிருக்கிறது. சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதானது, நாடு எதிர்நோக்கியுள்ள சமூகப் பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியாக எடுத்துக் காட்டப்பட்டாலும், அமைச்சுப் பதவிகள் பகிர்ந்து கொள்ளல், அதிகாரம் பகிர்தல் போன்றவற்றில் அதற்கு உடன்பாடு எட்டப்படவேயில்லை.

கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர் உருவான இறுக்கமான நிலைமை நாட்டை பெரும் அரசியல் புரட்சி நடைபெற்ற நாடாக மாற்றியிருக்கிறது. இருந்தாலும், அரசியல்வாதிகள் மாறிவிடவில்லை என்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சி அரசாங்க முயற்சியின் தோல்வியை நல்ல உதாரணமாகச் சொல்லலாம். ஆனால், அதில் அவர் ஒரு தவறு விட்டதாகவே சொல்லமுடியும். சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பான திட்டமிருக்கையில் ஏன் பெரும்பான்மையான அமைச்சர்களை மொட்டுக் கட்சியிலிருந்தே நியமித்திருந்தார்.

சர்வ கட்சி அரசுக்கான கலந்துரையாடல் நிறைவுக்கு வருமுன்பே திட்டங்கள், செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவது போன்றே இந்த அதிகாரப் போட்டி காணப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வ கட்சி அரசாங்கத்தினை அமைப்பதற்கான முயற்சிகள் கைகூடாமையினால், அம் முயற்சியைக் கைவிட்டு, இப்போது தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிகிறது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையுடன் இருக்கின்ற தற்போதைய பாராளுமன்றத்தில் சர்வ கட்சிக்கோ, தேசிய அரசாங்கத்திற்கோ அக் கட்சியின் பெரும்பான்மை ஆதிக்கம் தேவையாகவே இருக்கும். இவ்வாறான நிலையில் தேசிய அரசாங்கம் என்பது எவ்வாறு சாத்தியப்படும், கைகூடும்? என்பதுதான் இந்த இடத்தில் விவாதத்துக்குரியது.




பாராளுமன்றத்தில் யாரும் நாட்டு மக்களின் நலன் குறித்தோ, நாட்டின் எதிர்காலம் பற்றியோ மனச்சாட்சியுடன் சிந்திப்பதாக இல்லை என்ற குற்றச்சாட்டு காணப்பட்டாலும், அரசியல் என்று வந்துவிட்டால் அதனைப்பற்றி ஏன் யோசிக்க வேண்டும்? என்பதே நிலைப்பாடாக இருக்கிறது. அது ஒருபக்கமிருக்க, நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் இருந்து வருகின்ற சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் இதுவரையில் தீர்வுக்குட்படுத்தப் படவில்லை. அதற்காக நடைபெற்ற அகிம்சை முதல் ஆயுதம் வரையான போராட்டங்கள், பெற்றுக் கொடுத்தவைகள் யாவும் பெரும் இழப்புக்களும், துன்பங்களும், துயரங்களுமே!. அது தொடர்பில் தமிழ் அரசியல் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதாது என்ற குற்றச்சாட்டே இருந்து வருகிறது.

தமிழர்களின் வலியை பெரும்பான்மையினர் உணர மறுப்பதே கவலைக்குரியது. வடக்கு - கிழக்கு துண்டாடப்படுவதும், காணிகள் கபளீகரம் செய்யப்படுவதும் காலங்காலமாக நடைபெற்று வருகின்ற ஒன்று. கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை அரசாங்கங்களும், அரச தலைவர்களும் சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக தங்களுக்கு வேண்டிய தமிழ் இனப்பரம்பலைக் குறைக்கின்ற செயற்பாட்டையே முன்னெடுத்திருந்தனர்.

1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது முதல், தமிழர்களின் போராட்டம் ஆரம்பமானது. அதனைச் சிங்களவர்கள் கணக்கிலும் எடுக்காமைபோன்று இத்தனை காலத்திலும் அதற்கான தீர்வை வழங்காமலிருப்பதற்கும் காரணங்கள் சரியாக வெளிப்படுத்தப்படவில்லை. பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு இதயச் சுத்தியுடன் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இவற்றில் மாற்றம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், ஒற்றையாட்சி சட்டத்துக்குள் இருக்கின்ற இலங்கை, அதற்குள் இருந்து முதலில் வெளியே வந்தேயாக வேண்டும். அதன் மூலமே இனமுரண்பாட்டுச் சிக்கலுக்கானத் தீர்வைச் சாத்தியப்படுத்தும் முதல் அடியை எடுத்து வைக்க முடியும். வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கையுடன் இருக்கின்ற தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கு முன்வருகைகள் போதாமலிருப்பது கவலைக்குரியது.

தமிழ் மக்களின் உரிமைக்கான பிரச்சினையில் பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், சந்திரிகா கொண்டுவந்த தீர்வுப் பொதி, இடைக்கால நிருவாக சபை எனப் பல முயற்சிகள் பயனற்றே போயின. ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டதும், தீர்வுப் பொதிகள் எரிக்கப்படுவதும் நடை பெற்றன. அதனை தேசியக் கட்சிகளே செய்திருக்கின்றன. இலங்கையின் பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கொள்கையுடையவர்களாகக் காட்டிக் கொண்டிருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி என்கிற ஜே.வி.பி கூட தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வைக் கொடுப்பதில் பூரண அக்கறையைக் காட்டியிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கில் யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர் அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச 13 பிளஸ், பிளஸ் தருவேன் என்று கூறிவிட்டு கை உதறிவிட்டார். அதற்குப் பின்னர் ஜனாதிபதியாக வந்த மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்துடன் முரண்பட்டுப் புதிதாக அமைக்கப்படவிருந்த அரசியலமைப்பு முயற்சியை இடைநடுவில் செல்லாக் காசாக்கினார். அதற்கான காரணங்களை யாரும் இன்னமும் விளக்கவில்லை. இலங்கைக்கே உரித்தான விடயமாக இருக்கின்ற அரசியலமைப்புத் திருத்தம் என்பது முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. இப்போது 22ஆவது திருத்தம் கொண்டு வரப்படவிருக்கிறது.


INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund
Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2022
Straßenfest der Tamilen
02.09.2022
Fr. 16:00 - 00:00
03.09.2022
Sa. 11:00 - 00:00
04.09.2022
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
samo.fa
Integrationsagentur der
Stadtteil-Schule
Dortmund e.V.
தமிழர் கலையகம்
TKD
Tamilische Kulturverein Dortmund
SIVANDIGITAL
SOUND&MORE
ortel MOBILE
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
STS
MTV
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90

இந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக 9 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிக்கின்றன. 22ஆவது திருத்தம் வரையில் இவற்றுக்கான விடைகள் கிடைக்கப் போவதில்லை.

இந்த நிலையில் புலம்பெயர் தமிழர் அமைப்புகள், புலம் பெயர்ந்தவர்களின் தடைகளை நீக்கி ஒரு நல்லெண்ணத்தை அரசு வெளிப்படுத்தியிருந்தாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகளுக்கு அது தீர்வாக இருக்கப் போவதில்லை.

கடந்த கால யுத்தத்தின் போது தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் இப்போது சிங்களவர்கள் மீதே பயன்படுத்தப்படுகிறது. மேலை நாடுகள், மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள் என அழுத்தங்கள் பறந்து வந்து கொண்டிருக்கின்றன. பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கான முயற்சிக்காகவே சர்வகட்சி அரசோ, தேசிய அரசாங்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இருந்தாலும் அந்த அரசாங்கத்தின் முதல் வேலைகளில் ஒன்றாக தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு இருக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

எது எவ்வாறானாலும், பெரும்பான்மை சமூகத்தையும், பௌத்த தேசியவாதத்தையும், அதன் மேலாண்மையையும் இலக்காகக் கொண்டதாக இருக்கின்ற இலங்கையின் ஆட்சிமுறையில் மாற்றம் ஏற்படுகின்ற தேசிய இணக்கப்பாடு சாத்தியமெனில், அதுவே தேசிய அரசாங்கத்திற்குப் பயனைப் பெற்றுத் தருவதாக இருக்க முடியும். தமிழர்கள் நலன் சார்ந்து நோக்குகையில், தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் இந்த மனநிலையில் மாற்றமில்லையெனில் பயனேதுமில்லை. அந்தவகையில் வலிமையான ஜனநாயக கட்டமைப்பை உருவாக்கி, இன ஐக்கியத்தை ஏற்படுத்த உளப்பூர்வமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயலாற்ற வேண்டும். அது தேசிய அரசாங்க முயற்சி மூலம் நடைபெறும் என்று நம்புவோம்.

ஆனாலும், பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றிவாதமும், இராணுவ மேட்டிமைத்தனமும் கோலோச்சியிருக்கின்ற நிலைமையில் இது சாத்தியமா? என்று சீர்தூக்கிப் பார்க்கலாமே தவிர, வேறு எதனையும் செய்துவிட முடியாது. ஆனால், தேசிய அரசாங்கத்திற்கு முன்மாதிரியாக, கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் கிழக்கு மாகாண சபை இயங்கியிருந்தாலும், அந்த ஆட்சி குறித்து தமிழர் தரப்பினால் முன் வைக்கப்படுகின்ற விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்களுக்குக் கூட சரியான விளக்கமளிப்பு, தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படாத நிலையில் சர்வ கட்சி அரசோ, தேசிய அரசோ தமிழர் தரப்பால் எவ்வாறு கையாளப்படும் என்பது தெளிவில்லாததே!.

அதே நேரத்தில், கடந்த கால யுத்தம் நாசமாக்கிய தமிழர் தாயகப் பிரதேசத்தினைக் வெறும் பொருளாதாரச் சீரமைத்தலால் சரி செய்துவிட முடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் வரை இலங்கைத் தீவு சுபிட்சமாக முன்னோக்கி நகரும் என்பது வெறுமையான பகல் கனவே!.

தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைக் கோரிக்கைக்கானத் தீர்வு அதிகாரப் பகிர்வு மூலமே சாத்தியம் என்பதும், இன முரண்பாட்டிற்கு முற்றுப் புள்ளியாக அது அமைந்துவிட்டால் சிறப்பு என்பதும் நிதர்சனமே!. ஆனாலும், பல தசாப்தங்களாக, பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்குச் சரியான அனுசரிப்பையேனும் வெளிப்படுத்தாத சிங்களத் தலைவர்களிடமிருந்து புதிய ஜனாதிபதி எவ்வாறு அரசியல் மறுசீரமைப்பைச் செய்வார்? என்பதை நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். வரலாறு வழங்கிய சந்தர்ப்பங்கள் கணக்கிலெடுக்காத கடந்த ஆட்சியாளர்களும் இணைந்திருக்கின்ற இந்த ஆட்சி, அதற்கு இடம் கொடுக்குமா? என்றும் பார்ப்போம்.

மனோ

# மூடி மறைத்த குப்பையால் எரியும் இலங்கை அரசும் நாடும், மக்களும்



இந்தியாவின் நலன்சார்ந்த அரசியல் திட்டமாக மகிந்த ராஜபக்ஷ பதவி பறிக்கப்பட்டு 2015இல் மைத்திரிபால சிறிசேனா இலங்கை அதிபராகத் தெரிவானார். 1987இல் பூமாலை நடவடிக்கை மூலம் இராணுவ ரீதியாகத் தலையிட்டு, தமிழ் இன அழிப்பையும், அரசு நோக்கிய புலிகளின் அரசையும் அழிக்கப் பெரிதும் காரணமாக செயற்பட்ட இந்தியாவே இத்தகைய பொய்யான ஜனநாயக நடவடிக்கை மூலம் தனது ஆளுமையை நிலை நாட்ட முயன்றது.

அதற்காக போர்க் குற்றங்களின் இரத்தம் தோய்ந்த கரங்கள் இன, மத வேறுபாடுகளை மறந்து செயற்பட்டதால் யகலபாலன அல்லது நல்லாட்சி என்கிற கள்ளக் குழந்தையை இலங்கை பெத்துப் போட்டது. அப்பாவாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சேனா நாயக்கா நாட்டின் அதிபராகவும், அம்மாவாக ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரம சிங்காவும் என்கிற குதிரையும், கழுதையும் இணைந்து பிரசவித்த கோவேறு கழுதைதான் யகபாலன எனப்பட்ட நல்லாட்சி. கோவேறு கழுதைகளால் குட்டிகளைப் பெறமுடியாது என்பதால், அதனால் நாட்டுக்கு எதுவித பயனும் ஏற்படவில்லை.



ஆனால் அது இலஞ்சம், ஊழல் என ஏராளமான புழுக்கைகளைப் போட்டு நாட்டையும், சர்வ தேசத்தை குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையும், ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் கூட்டங்களையும் நாறடித்தது. இதில் கலியாணப் புரோக்கராகச் செயற்பட்ட த.தே.கூ. தலைவர் இராஜவரோதயர், சம்பந்தன் கழுதைப் புழுக்கைகளை முடிந்த அளவு தமது சால்வைத் தலைப்பில் ஏந்தி, மூடிமறைத்தும் அவரால் சமாளிக்க முடியாமல் தைப் பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி, நத்தார் புதுவருட சினிமா விளம்பரங்களைப் போன்று நம்பிக்கைச் சலுகைகளை அள்ளி வீசி, கடைசியில் ஒரு தமிழ் அப்பாவி அரசியல் சந்தேக நபரைக் கூட விடுதலை பெற்றுக்கொடுக்க முடியாத 2வது தமிழ் எதிர்கட்சித் தலைவராக உலக வலம் வந்தார்.



வாக்களித்தத் தமிழ் மக்களின் அன்றாட அரசியல் பிரச்சனைகளைக்கூடத் தீர்க்க முடியாத கல்யாணப் புரோக்கரைப் போன்று வாயால் வடை சுடுகிற அரசியலைச் செய்தார். அப்படிப்பட்ட யோக்கிவான், ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஆயத்த ஆடைகள் மீதான வரிச்சலுகை நீக்கப்படாததால் நாடு பொருளாதாரப் பள்ளத்தில் விழுகிறது என்று பாராளுமன்றத்தில் பேசியதும் கழுதை விட்டை போலப் பார்க்கப் பட்டது.

ஆனாலும், அவர் சுமந்திரனை ஜெனிவாவில் சிங்கள அரசின் பொறுப்புக் கூறலுக்கான கால அவகாசத்தை 4 வருடங்கள் பெற்றுக் கொடுக்கச் செய்தார். அன்று வந்த அதே திருடர் கூட்டம்தான் இன்றும் நாட்டை விடாமல் ராஜபக்ஷ குடும்பத்தையும், தங்களையும் காப்பாற்றி வருகின்றது.

2015இல் உதயமான நல்லாட்சி, மீண்டும் அறகலிய என்கிற மக்கள் புரட்சியாக உருவாக்கப் பட்டதோ என்கிற சந்தேகம் மக்களிடையே வலுப் பெற்று வருகிறது. மாமா ஜே.ஆரின் நரித்தன அரசியலின் வாடை மருமகன் ரணிலின் சொல்லிலும், செயலிலும் வீசுகிறது.

2021 டிசெம்பர் 28இல் கொழும்பு ரெலிகிராஃப் இணையத்தில் பொருளாதாரத்தில் இடது, வலம் என்று இல்லாமல் மக்கள் நலன்சார்ந்த நடுநிலை ஒன்றின் அவசியத்தை, இலங்கை அரசின் ஜெனிவா பிரதிநிதியாகச் செயற்பட்ட டாக்டர் தயான் ஜயதிலகா விவாதப் பொருளாக முன்வைத்தார். எனவே இன்றைய இலங்கை அரசின் பொருளாதார நெருக்கடி, அன்றே விவாதப் பொருளாக விளங்கியது. ஆனால் கோத்த பாய தலைமையிலான அரசு, போதிய கவனம் எடுக்காமல் ஒரு மூலையில் கூட்டிக் குவித்த குப்பை மேடாக மாற்றிவிட்டது. அதுதான் இன்று ஒட்டுமொத்தக் குடும்பத்தையும், அரசுக் கட்டுமானங்களையும் சாம்பல் மேடாக்கி விட்டது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

நாம் காண்பவை யாவும் உண்மையா? அல்லது உலக மற்றும் பிராந்திய வல்லரசுகளின் மறைமுக போரா? என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கொழும்புத் துறைமுக சரக்குப் பெட்டக முனைகளை பங்கிட்டுக் கொள்ளும் சீனாவும், இந்தியாவும் எதற்காக அம்பாந்தோட்டையில் சீனக் கடற்படைக் வலம் வருவதை எதிர்க்க வேண்டும்? மேலும் கொழும்புக் கடலில் சீனா தனக்கென உருவாக்கிய துறைமுக நகரத்தின் ஏகாதிபத்திய அதிகாரங்களை வைத்திருக்கும் நிலையில், ரணிலின் கைகளை முறுக்கிப் பார்ப்பது ஏன்?

சீனாவுடன் அமெரிக்கா, இந்தியா உட்பட எல்லா நாடுகளும் இறக்குமதி, ஏற்றுமதி செய்யும் பொழுது இத்தகைய சண்டை காதலர்களின் ஊடல் போல எமக்குத் தெரிவதில் என்ன வியப்பு? இவர்கள் நடத்தும் எலி, பூனைச் சண்டை விளையாட்டில் அப்பாவி இலங்கைச் சிங்கள தமிழ் மக்களின் உயிர்தான் போகிறது. இந்த விவாத்தித்தில் பதிவான ஒரு வாசகர் கருத்தின் ஒரு பகுதி இப்படிச் சொல்கிறது:-

“இந்த நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத படிக்கு ஸ்ரீலங்கா எப்படி வறிய நாடாகியது? பல தசாப்தங்களாக

வெளிநாடுகளாலும், முதலீட்டாளர்களாலும் வழங்கப்பட்ட கடன்களும், முதலீடுகளிற்கும் என்ன நடந்தது? திரும்பத் திரும்ப அவற்றால் ஏற்பட்ட நன்மைகளையும் அழித்து விட்டோம். மீண்டும் முதலீடுகளைத் தவறாகப் பயன் படுத்தினோம். எனவேதான் இந்த நாட்டுக்கு ஒரு பொருளாதாரத் தீர்வுதான் தேவை. எனவே பணம் கிடைத்தால் அது இலாபகரமாகப் பயன் படுத்தப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?”

கொஞ்சம் நினைத்துப் பாருங்கள், 1958 இன் தொடக்கம் எத்தனை தடவைகள் 1962,1970,1977,1981,1983ம் 1983 தொடக்கம் 2009 மேலும் 2019இல் தொழில் அகங்களும், உட்கட்டுமானங்களும் மீண்டும் மீண்டும் அழிக்கப் பட்டன. ஏனைய வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஒட்டு மொத்த தனியார் வருமானத்தை விடவும், இலங்கையின் நிதியறிக்கை மிக அதிகம்.



ஊழல் மற்றும் தவறான அதிகாரப் பிரயோகத்தால் காலப் போக்கில் இழப்புகள் பாரிய வளர்ச்சி கண்டன. நாங்கள் ஒருபோதும் சிக்கலைத் தீர்க்க முயலவில்லை. அதற்குப் பதிலாக நாங்கள் சிக்கல் மீது சிக்கலை உருவாக்கினோம். நன்கு அறியப்பட்ட ஊழல் மன்னன் இலங்கையின் முன்னாள் உச்ச நீதி மன்ற நீதிபதி சரத் என் சில்வா. (அகரம்)

இன்று நீங்கள் மிகச் சுலபமாக ஒரு நீதிபதியை வாங்கி விடலாம். அரசியல்வாதியும் அப்படித்தான். சந்தேகமே வேண்டாம். நீங்கள் ஒரு விஞ்ஞானியைக் கூட வாங்க முடியும். இக்கருத்து எங்கள் நாட்டின் தோலையே உரித்துக் காட்டிவிட்டது.




கல்லெறி வேலுப்பிள்ளை



# “என்ன கொடுமை சரவணா!”

## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. இனி எந்த மொழியைப் படிக்கிறதெண்டு எனக்கு ஒரே யோசனை. அதால ஒரே தலையிடி. இந்தி பிடிக்கிறதா, சைனீஸ் பிடிக்கிறதா, அல்லது இதுவரைக்குமே ஒழுங்காப் படிக்காத தாய்மொழியான தமிழைப் படிக்கிறதா எண்டு தெரியேல்லை. ஒரே குழப்பமாக் கிடக்கு. ஆனாலும் பாருங்கோ, எங்கட ஆக்கள் புதுவிதமான விசயங்களில அப்பிடியே பாஞ்சு கவ்வுறதில மகா கெட்டிக்காரர் கண்டியளோ. இருக்கிறதை விட்டுட்டு எதுவுமேயில்லாத பக்கம் ஓடுறதுக்கு அடிபடுவினம் கண்டியளோ.**

தமிழர்கள் உலகம் முழுக்க பல மதங்களைப் பின்பற்றுகினம். சைவம், இந்து, கிறித்தவம், இசுலாம் என்பது அநேகமான தமிழர்களின் மதங்களாக இருக்கிறது. ஆனால் எந்த மதமும் எங்கட தாய்மொழியைச் சிதைக்க இடம் குடுக்கக் கூடாது பாருங்கோ. அது மிக முக்கியமானது. ஒல்லாந்தர்கள் வந்த பொழுது கிறித்தவம் பரவிச்சுது. ஆனால் ஒல்லாந்து மொழியை எங்களுக்குள்ள அது திணிக்கேல்லை கண்டியளோ. ஆனால் இந்த இந்துமதம் வந்ததும் பத்தாமல், இந்தியையும் திணிக்க நிக்குது பாருங்கோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ, ஆ.. ஊ எண்டாலே கவிதைகளா ஊரில இருந்து அள்ளி விடும் வித்துவானை கிட்டடியில இந்தியாவில இருந்து வந்த ஓர் பிரமுகர் சந்திச்சுப் போனார். வந்த பிரமுகர் இந்து பிரமுகர். அவர் ஆட்டுக்குட்டி அரசியல் செய்ய வந்த விண்ணன். ஊரில இருந்து கவிதையா அள்ளிவிடும் வித்துவான் அவரைச் சந்திச்சு ஆசிபெற்றுக்கொண்டார். சரி வெறும் ஆசி தானே எண்டு நினைச்சன். ஆனால் அது ஆசி இல்லை, யாழ்ப்பாணத்துக்குப் போடப்பட்ட விச ஊசி எண்டு பிறகுதான் தெரியவந்தது கண்டியளோ.

கவிதை பாடுற விண்ணனையும், இன்னும் கொஞ்சப்பேரையும் இந்தியாவில இருந்து வந்த பிரமுகர் சந்திச்சு போன கொஞ்ச நாளில, யாழ் பல்கலைக்கழகத்தில சமசுகிருதத்துக்கு எண்டு ஒரு தனிப்பீடம் ஆரம்பிச்சுப்போட்டங்கள். இதென்ன புதுசாக்கிடக்கு எண்டு பாத்தால், பிரமுகர் வந்து போனதின்ர அவசியம் அப்பதான் விளங்கிச்சுது கண்டியளோ.

கவிதை பாடுற தம்பி ஏற்கனவே காவியில பற்று கண்டியளோ. அது சும்மா பற்றெல்லாம் கிடையாது, அதி உச்சப் பற்று. ஒரு கட்டத்தில கவிதைத் தம்பி ஊக்கம் குடுத்து ஒரு கவிதை ஒண்டு வெளியிட்டால் சமசுகிருதத்திற்குப் பின்னால எல்லாரும் ஓடுவார்கள் எண்டு பாத்திச்சினம். ஆனால் யாழ் பல்கலைக் கழகத்தில சமசுகிருதத்திற்கு தனிப்பீடம் ஆரம்பிக்கப் போறாங்களாம் எண்டு கேள்விப் பட்ட மறுநாளே, இணையத்திலையும், மின்னஞ்சலூடாகவும் பரவின விமர்சனங்களால கவிதைத் தம்பி கொஞ்சம் கலங்கித்தான் போனார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில இருக்கிற பீடாதிபதிகள் முதலில தாய் மொழியான தமிழை ஒழுங்கா படிச்சவையோ எண்டு கேட்டால் உண்மையில இல்லை எண்டுதான் சொல்லவேணும். தொல்காப்பியம் தொடங்கி சிலப்பதிகாரம் வரைக்கும் நீண்டு பரந்திருக்கும் இலக்கியங்களை எங்கட ஆக்கள் தொட்டும் பாக்குறேல்லை. திருக்குறளில ஆய்வு செய்து காலத்திற்கேற்றவாறு அதை மக்களிடத்தில் பரப்புறேல்லை. பதினெண்கீழ் கணக்கு நூல்கள் பற்றி ஒரு இழவும் தெரியாது. இதுக்குள்ள செத்துப்போன மொழியான சம்சுகிருதத்தை படிப்பிக்கப் போகினமாம். பெற்ற தாயின்ர சிறப்புத் தெரியாத நாதாரி, பக்கத்துவீட்டுப் பிணத்துக்கு பூசை செய்திச்சுதாம் பாருங்கோ. பல்கலைக் கழகத்திலே இப்ப இருக்கிற பீடாதிபதியும் ஆனானப்பட்ட ஆள் இல்லை. ஏற்கனவே தமிழினப்படுகொலை நினைவுச் சின்னத்தை உடைச்ச ஆளல்லே. ஆள் இப்ப இந்தியாவின் கையாளாக மிளிர்ந்து நிக்குறார் பாருங்கோ. அவர்தான் சமசுகிருதத்தை கொண்டுவரப் பாத்தவர். கடைசியில எல்லாரும் கிழிக்க வெளிக்கிட்ட உடன ஆள் வாயை மூடிட்டுது. சமசுகிருதத்திற்கு தனிப்பீடம் அமைக்கிறதும் நிண்டு போச்சு.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

சரி, அதுதான் நிண்டுபோச்சே எண்டு பாத்தால், திடீரெண்டு பிரபலமான கல்லூரியில இந்தி மொழி வகுப்புகள் தொடங்கப்போகினமாம் எண்டு ஓர் செய்தி கிடைச்சுது. அதை உண்மையோ எண்டு கிளறிக்கொண்டு போனால், கவிதையா பாடி கழுதையா கத்துற தம்பி கல்லூரியின்ர கீதத்தில ஆரிய மொழியும் படிக்கலாம் எண்டு இருக்குதிறதால இந்தி படிக்கிறதில தப்பில்ல எண்டு வலைத்தளத்தில கம்பு சுத்த வெளிக்கிட்டார். இந்தி மொழி படிச்சால் இந்தியாவில புலமைப்பரிசில் கிடைக்குமாம் எண்டு கொஞ்சப்பேர் கம்புசுத்த வெளிகிட்டினம் பாருங்கோ. அதைவிடக் கொடுமை எண்ணவேண்டால், யாழ்ப்பாணத்திற்கும் தமிழகத்திற்கும் சரக்குக் கப்பல் விடுற ஒருத்தர் வந்து இந்தி படிச்சால் டில்லிக்கு எங்கட பிரச்சனையை கொண்டு போகலாம் எண்டார். எங்கட பிரச்னையை அவரின்ர சரக்கு கப்பலில ஏத்திக்கொண்டு போற அளவுக்கு சாதாரண பிரச்சனையா நினைச்சாரோ தெரியேல்லை பாருங்கோ.

அவரின்ர புலம்பல் இப்பிடியெண்டால், இரண்டாயிரத்தில பிறந்த எங்கட குஞ்சுகளின்ர தொல்லை அதைவிடப் பெரிசு பாருங்கோ. இந்தியைப் படிச்சால் எதிர்காலத்தில நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும் எண்டும், மொழியைப் படிக்கிறதில என்ன தப்பு எண்டும் குலவிக் கும்மாளம் போடுகினம் கண்டியளோ. இவைக்கு பச்சை மட்டை வைத்தியம் செய்ய ஆக்கள் இல்லை கண்டியளோ. தமிழில ஒழுங்கா எழுதத் தெரியாது, தமிழில பேசச்சொன்னா மேடையில ஏறி நிண்டு

நடுங்குறதைத் தவிர வேறொன்றும் தெரியாது. திருக்குறளை எழுதினது ஆர் எண்டு கேட்டா விஜயகாந்த் எண்டு சொல்லுற ஆக்கள் இந்தி மொழி படிச்சு இந்தியாபோய் கோடி கோடியா உழைச்சுக் கொட்டப்போகினமாம். இருக்கிற வளவை உழுது விதைக்க வக்கில்லை. அதுக்குள்ளே இந்தியில் படிச்சு இங்கிலாந்துக்கு பிரதமர் ஆகப்போகினம் கண்டியளோ.

இவளவு பிரச்னையும் ஒரு பக்கத்தால நடந்து அல்லோலகல்லோலமாக்கிடக்கு. ஆனால் எங்கட பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வாய்திறக்கேல்லை கண்டியளோ. ஏனெண்டால் ஏன் சோலி எண்ட பயம் பாருங்கோ. ஒரு சாதாரண மொழிப்பிரச்சனைக்கே வாயைத் திறக்காத நீங்கள், வேற எதுக்கு வாயைத் திறக்கப் போறியளோ தெரியேல்லை. இந்திமொழியை தமிழன் படிச்சு கொடி கட்டிப் பறக்கவேணும் எண்டு இந்தியத் தூதரகம் நினைக்குதெண்டு யாராவது புளங்காங்கிதம் அடைஞ்சால், அவனைப்போல வடிகட்டின முட்டாள் உலகத்தில இல்லை கண்டியளோ.

பழையபடி ஊரில 2009 க்கு முதல் இருந்த மாதிரி, பச்சைமட்டை வைத்தியங்கள், சைக்கிள் செயின் வைத்தியங்கள், போன்ற சித்தமருத்துவ வைத்தியங்களைத் தொடங்க வேண்டிய தேவை வந்திருக்குப் போலதான் கிடக்கு. இல்லையெண்டால் இந்த ஊளையிடுற நரியளைக் கட்டுப்படுத்தேலாது கண்டியளோ. எங்கட ஆட்களுக்கு வைத்தியம் இல்லாமல் வாழ்வு இல்லை பாருங்கோ. அந்த வைத்தியங்களால தான் 2009 க்கு முதல் யாழ்ப்பாணம் ஓரளவுக்கு ஒழுங்கா இருந்தது. இப்ப வைத்தியர்கள் இல்லாத துணிவில எல்லாரும் விரும்பின கூத்தெல்லாம் ஆடுகினம்.

காலம் காலமா எங்கட மண்ணை கூறுபோட்டு விற்கவும், அந்நியமோகத்தில சிக்குப்பட்டு ஊரை நாசம் பண்ணவும் எண்டே ஒரு கூட்டம் அலையுது கண்டியளோ. நாங்கள் தமிழராக அதுவும் ஈழத்தமிழராக எங்கட மொழி, பண்பாடு மற்றும் கலை விசயங்களில மிகக் கவனமாக இருக்கவேணும். இல்லையெண்டால் வந்தான் வரத்தான் எல்லாம் கவர்ச்சி காட்டியே எங்களை அழிச்சுப்போடுவான்.

**ஆளும் வளரனும் அறிவும் வளரனும்**
**அதுதாண்டா வளர்ச்சி - உன்னை**
**ஆசையோடு ஈன்றவளுக்கு**
**அதுவே நீ தரும் மகிழ்ச்சி**
**நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்**
**காலம் தரும் பயிற்சி**
**உன் நரம்போடு தான் பின்னி வளரனும்**
**தன்மான உணர்ச்சி**

**- அப்ப வரட்டே**




SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....
30%
50% OFF
தள்ளுபடி
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648



தேவன்

## யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட வேண்டியது

# இந்தி மட்டுமல்ல, இந்து தத்துவமும் தான்!

கடந்த மாதம் யாழ் பல்கலைக் கழகத்தில் சமசுகிருத மொழிக்கென தனிப்பீடம் அமைக்க, இந்திய அரசு முயற்சி செய்தது. மக்கள் மத்தியில் இந்தச் செய்தி பரப்பப்பட்டு, விழிப்புணர்வு ஏற்பட்ட நிலையில், பலர் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டது. தற்பொழுது பாடசாலைகள் ஊடாக இந்தி மொழியைக் கற்பிப்பதற்கு முயற்சி செய்த யாழிலுள்ள இந்தியத் தூதரகம், அதன் முதல் முயற்சியாக யாழ் இந்துக் கல்லூரியில் அதற்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறது. இதற்கு யாழ் இந்துக் கல்லூரியின் முதல்வரும் பலியாகியிருக்கிறார்.

இந்தச் செய்தி மக்கள் மத்தியில் பரவி, வலைத்தளங்களில் இதற்கு பலர் எதிர்ப்புக் கொடி காட்ட, இன்று இது பெரும் சிக்கலாக மாறியிருக்கிறது. இதற்குள்ளும் சிலர் ஓர் மொழியைக் கற்பதில் என்ன தவறு? என்றும், கற்றால் இந்தியாவில் புலமைப்பரிசில் கிடைக்கும் என்றும் புரளிகளைக் கிளப்பி விட, சில விடயங்களை ஆராய வேண்டி ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் இந்தி மொழி கற்பிக்க முனைவது ஓர் புறமிருக்க, இந்தியின் பிறப்பிடமான வட இந்தியாவில் இந்தி கற்றவர்களின் நிலை என்ன? எனத் தேடிப் பார்த்தேன். அங்கேயே இந்தி மொழி கிழிந்து கந்தல் கந்தலாகத் தொங்குகிறது. இந்தி பேசப்படும் வட இந்தியப் பாடசாலைகளில் கூட, ஆங்கிலம் கட்டாயமாக்கப் பட்ட மொழியாக இருக்கிறது.

இந்தி பேசும் மாநிலங்களிலும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்கும் போது, அவர்களால் ஏன் தமிழர்களுடன் ஆங்கிலத்தில் உரையாட முடியாது? எதற்காக இன்னொரு இணைப்பு மொழி? பள்ளியில் ஆங்கிலம் படித்தாலும், அவர்களால் நம்மோடு ஆங்கிலத்தில் உரையாட முடியாது என்றால், பள்ளியில்

இந்தி படித்து விட்டு நம்மால் மட்டும் எப்படி இந்தியில் உரையாட முடியும்?

இந்தியாவின் மொத்த சனத்தொகையில், இந்தி பேசுபவர்கள் 25%. பிற மொழியினர் 75%. யார் பெரும்பான்மை? இந்த 25 விழுக்காடு மக்களோடு தொடர்பு கொள்ள மீதம் இருக்கிற 75 விழுக்காடு மக்கள் இந்தி கற்க வேண்டுமா? இந்தி படித்தால்தான் குறிப்பிட்ட சில அரசு பணிகள் கிடைக்குமானால், அந்தச் சட்டத்தை அல்லவா நாம் கேள்வி கேட்க வேண்டும்? இந்த நாட்டில் அனைத்து மொழிகளும் சமம், ஆனால் ஒரு மொழி மட்டும் உயர்ந்தது என்பதை எப்படி ஏற்று கொள்வது...?

THANTHI TV

## "உ.பியில் இந்தி பாடத்தில் சுமார் 7.95 லட்சம் மாணவர்கள் தோல்வி" - உத்தரபிரதேச மாநில தேர்வு வாரியம் தகவல்

பதிவு : ஜூன் 30, 2020, 09:18 AM

*உத்தர பிரதேச மாநிலத்தில் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் இந்தி பாடத்தில் சுமார் 7 லட்சத்து 95 ஆயிரம் மாணவர்கள் தோல்வி அடைந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

### இந்தி படித்தால் வேலைவாய்ப்பு பெருகுமா?

2017ஆம் ஆண்டு, மத்திய அரசு **Economic Survey** என்ற பொருளாதாரம் குறித்த கணக்கெடுப்பு செய்து, ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து பிற மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து செல்பவர்கள் குறித்த ஆய்வு முடிவை வெளியிட்டது. அந்த அறிக்கை அரசு இணைய தளத்தில் இருக்கிறது. இந்த அறிக்கையின் படி, பிற மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வதில் முதலிடத்தில் இருப்பது உத்திர பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், ராஜஸ்தான். இவை அனைத்தும் அத்தனையும் இந்தி பேசும் மாநிலங்கள்.

இந்தி மொழியைக் கற்பதில் என்ன ஆபத்து இருக்கிறது? என்று ஓர் கூட்டம் யாழ்ப்பாணத்தில் கிளம்பியிருக்கிறது. அது பயன்படாமல் போனால் என்ன? ஒரு மொழியைக் கற்றுக் கொண்டால் குடியா மூழ்கிப் போய் விடும் என்ற கேள்வியைக் கூட சிலர் எழுப்புகிறார்கள்.

முதலில் இந்தியாவின் அதிகமாக இந்தி மொழி பேசும் மாநிலமான உத்திர பிரதேசத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டில் பொதுத்தேர்வு தேர்வு முடிவுகளைப் பார்த்து விடுவோம். இந்தி பாடத்தில் தேர்ச்சி அடைந்தவர்கள் 66.71 வீதம். தோல்வி அடைந்தவர்கள் 32.29 வீதமாகும். அத்தனை மாணவர்களின் வாழ்விலும் ஓர் ஆண்டு வீண். தேர்வில் தோல்வி அடையும் மாணவர்களில் பெரும் பகுதியினர் படிப்பை பாதியில் நிறுத்துகின்றனர். இந்தியை வாழிட



| | | | | |
|---|---|---|---|---|
| Haryana | -0.9 | -1.7 | -34 | -86 |
| Assam | -4.2 | -1.9 | -209 | -114 |
| Odisha | -2.6 | -3.7 | -173 | -290 |
| Madhya Pradesh* | -1.2 | -4.2 | -166 | -765 |
| Rajasthan | -6.2 | -6.2 | -602 | -791 |
| Himachal Pradesh | -6.7 | -6.8 | -80 | -90 |
| Bihar* | -6.3 | -11.1 | -1,135 | -2,695 |
| Uttar Pradesh* | -9.9 | -14.4 | -2,955 | -5,834 |
| Total (Major Sending States) | | | -5,855 | -11,200 |

மொழியாகக் கொண்ட உத்தரப் பிரதேசத்திலேயே இந்நிலை என்றால், யாழ்ப்பாணத்தில் படிப்பவர்களுக்குப் புலமைப் பரிசில் கிடைக்குமா? அல்லது அந்தப் புலமைப் பரிசில் எதற்குப் பயன்படப்போகிறது?

இன்றைய நிலவரப்படி, இந்தி பேசும் குஜராத் என்ற இடத்தில் அடிப்படை கல்வியைக் கற்றுக் கொடுக்கவே தேவையான அளவு ஆசிரியர்கள் இல்லை. 13,000 ஆசிரியர்கள் அதற்குத் தேவைப்படுகிறார்களாம். உபி, பீகார் மாநிலங்களில் இன்னும் நிலைமை மோசமாக இருக்கிறது. தனது நாட்டிலேயே குஜராத்தி மற்றும் பீகாரி என்ற இரண்டு மொழிகளைக் கற்றுக் கொடுக்கவே நிதியை ஒதுக்காத இந்திய அரசு, யாழ்ப்பாணத்தில் கற்பவர்களுக்குப் புலமைப் பரிசில் தரப்போகிறதா? யாழ்ப்பாணத்தில் கற்பவர்களுக்கானப் புலமைப் பரிசிலுக்கு நிதி கிடைக்கும் என்பது வெற்று வாய்ப் புலம்பல்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் தமிழை அழிப்பதற்கான அத்தனை முயற்சிகளையும் இந்திய அரசு செய்து வருகிறது. செம்மொழிகளுக்குக் கடந்த 3 ஆண்டுகளில் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு? என்ற கேள்விக்கு, 03.02.2020 அன்று மக்களவையில் மத்திய அமைச்சர் பிரகலாத் சிங் படேல் அளித்த பதில் இது.

கடந்த 2017 - 2020 வரையான மூன்று வருட காலப்பகுதிக்குள் செத்த மொழியான சமஸ்கிருதத்தைக் காப்பாற்ற இந்திய அரசு செலவிட்ட தொகை 643.84 கோடி ரூபா. இதுவே தொன்மையான தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கிய தொகை 22.94 கோடி ரூபா. 644 கோடிக்கும், 23 கோடிக்கும் இடையேயான தூரத்தை அளந்தாலே இவர்களின் பாசாங்கெல்லாம் வெளிப்படும். இதுதான் இவர்கள் பிற மொழிகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம். மத்திய அரசின் தமிழ் மொழி பாசமெல்லாம் பேச்சளவில் மட்டுமே! செயலில் இருக்காது என்பதை இந்தப் புள்ளி விவரத்தில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் இந்து தத்துவ சக்திகளை நுழைப்பதனூடாக சைவ நெறியையும், இந்தி மொழியை நுழைப்பதனூடாக தமிழ்மொழியையும் அழிப்பதற்கு இந்தியா முயல்கிறது. யாழ் இந்துக் கல்லூரியில் இந்தியா தனது முதல் முயற்சியைப் பரிசோதிக்கத் துணை போனவர் கல்லூரியின் தற்போதைய முதல்வரும் ஆவார். இவருக்குத் தகுந்த பாடம் கற்பிக்கப் பட்டால், ஏனையவர்கள் இதிலிருந்து ஒதுங்கிக் கொள்வார்கள். இதை இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியாக நினைக்கிறது. நான்கு பக்கமும் சீனாவால் சூழப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகள் இல்லாத சூழ்நிலையில், இந்தியாவின் பாதுகாப்பு அந்தோ கதியே!. இதிலிருந்து இந்தியா மீள முடியாது. அவ்வாறே யாழ்ப்பாணத்திலும் இந்து தத்துவமோ, இந்தி மொழியோ ஆள முடியாது. அதற்குரிய எதிர்வினை மக்களால் ஆற்றப்பட்டே தீரும்.


Jaffna Stores
Geschäftsführer : Herr Thayaharan Nadarajah
ENESAR
N.S.R.
என்எஸ்ஆர்
தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்
25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...
மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்
ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள்,
இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்
Jaffna Stores
www.jaffnastores.com
info@jaffnastores.de
Tel. - 0521 174794
Mobile - 01732807906
Feilenstraße 8
33602 Bielefeld
Subash
Purity of Taste
Basmati Rice

சண் தவராஜா

# கூட்டமைப்பும் தலைமைப் பதவியும்







சிறிலங்காவில் அண்மையில் கட்டவிழ்ந்த அரசியல் நிலவரங்களைக் கையாண்ட விதத்தின் அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் விமர்சனங்களைச் சந்தித்துள்ளது. அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, ஒரு சிலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்தார்கள் என்ற விபரம் ஒருபுறம் சர்ச்சையை ஏற்படுத்த, கூட்டமைப்பின் தலைவர் மாற்றப்பட வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் முன்வைத்த கருத்தும், வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி உள்ளது.

கூட்டமைப்பில் சர்ச்சைகளும், கூட்டமைப்பு தொடர்பான சர்ச்சைகளும் புதிதல்ல. 2009ஆம் ஆண்டில் ஈழத் தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் வகிபாகம் முடிவுக்கு வந்ததன் பின்னான காலப் பகுதியில், தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரேயொரு கட்சியாக விளங்கிய கூட்டமைப்பு இன்று நலிந்துபோய் இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வகித்துவரும் இரா. சம்பந்தனின் பல முடிவுகள் புறந்தள்ள முடியாத காரணங்களாக உள்ளன. குறிப்பாக

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசுத் தலைவர் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிக்க எடுத்த முடிவு தொடக்கம், அண்மையில் நாடாளுமன்றில் நடைபெற்ற அரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான வாக்கெடுப்பில் டக்லஸ் அழகப் பெருமாலை ஆதரிக்க எடுத்த முடிவு வரை கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் அதிருப்திகள் உள்ளன.

இந்த அதிருப்தி நிலைமையை மேலும் கொதிநிலைக்கு ஆளாக்கும் வகையில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் செயற்பாடுகள் உள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது. அதிலும், சுமந்திரனின் செயற்பாடுகள், கருத்துகள் தொடர்பில் கண்டனங்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், அவற்றை இரா சம்பந்தன் கண்டு கொள்வதில்லை எனவும் எடுத்துரைக்கப்படுகின்றது.

இன்றைய தமிழ் அரசியல்வாதிகளுள் வெளிப்படையாகவும், விவரமாகவும் பேசுபவர்களாக இரா சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரே உள்ளனர். இவர்களுள் சம்பந்தன் தனது வயோதிபம் காரணமாக ஏற்பட்ட தளர்ச்சியினால், தெளிவாகப் பேச முடியாத நிலையை எட்டியுள்ளார் என்பது ஒன்றும் இரகசியமான செய்தியல்ல. இதனால் இரா சம்பந்தனுக்காகவும் சேர்த்து சுமந்திரனே பேசும் நிலை உள்ளது.

கூட்டமைப்பின் தூண்களுள் ஒருவராகக் கருதப்பட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கடந்த பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து சற்று ஒதுங்கியிருப்பதை அல்லது ஓரங் கட்டப்பட்டு இருப்பதைப் பார்க்க முடிகின்றது. அவர் யாழ் குடாநாட்டோடு தனது செயற்பாடுகளைக் குறுக்கிக் கொண்டுள்ள சூழலில், சுமந்திரனின் கை இயல்பாகவே ஓங்கியிருப்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

தமிழரசுக் கட்சியை, அதன் பின்னைய வடிவமான தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை தலைமை மாற்றம் என்பது இயல்பாக தலைவரின் மரணத்தைத் தொடர்ந்தே நிகழ்ந்து வந்திருக்கின்றது. 1976இல் தந்தை செல்வாவின் இயற்கை மரணத்தைத் தொடந்து அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை தளபதி அமிர்தலிங்கம் பொறுப்பேற்றுக் கொண்டார். 1989இல் அவரின் படுகொலையை அடுத்து தலைமைப் பொறுப்பு மு.சிவசிதம்பரம் கைக்கு வந்தது. பின்னாளில் அவரின் மரணத்தை அடுத்து கட்சித் தலைவராக இரா சம்பந்தன் பொறுப்பேற்றார்.



அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் அவரே நீடித்தார்.

பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி, தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றது. தற்போதைய நிலையில் அந்தக் கட்சியின் சார்பில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். (அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான த.கலையரசன், தேசியப் பட்டியல் மூலம் தெரிவானவர் ஆவார். கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளும் பெற்ற வாக்கின் அடிப்படையிலேயே அவரது தெரிவு உள்ளதால், அவரை தமிழரசுக் கட்சியின் சார்பில் நேரடியாகத் தெரிவான உறுப்பினராகக் கருத முடியாது.) ரெலோ சார்பில் 3 உறுப்பினர்களும், புளொட் சார்பில் ஒருவரும் உள்ளனர்.

விகிதாசார அடிப்படையில் கூட்டமைப்பில் உள்ள இரண்டாவது பெரிய கட்சியாக ரெலோவே உள்ளது. அது மாத்திரமன்றி கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலாக ரெலோ அதில் அங்கம் வகிக்கிறது. அந்தக் கட்சியின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றுத் தனது பலத்தை நிரூபித்தும் வருகிறார். எனவே, கூட்டமைப்பின் தலைமைத்துவ மாற்றம் தொடர்பில் பேசுவதற்கான தார்மீக உரிமை அவருக்கு உள்ளதை எவரும் நிராகரித்துவிட முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2004ஆம் ஆண்டுத் தேர்தலில் மாபெரும் வெற்றியை ஈட்டியது. அந்தத் தேர்தலில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை கூட்டமைப்பு பெற்றுக் கொண்டது. விடுதலைப் புலிகளின் மறைமுக ஆதரவுடனேயே இந்த வெற்றி சாத்தியமானது என்பது இரகசியமல்ல. ஆனால், தொடர்ந்து வந்த தேர்தல்களில் கூட்டமைப்பினால் அத்தகைய வெற்றியைப் பெற முடியவில்லை. இனிமேலும் அதுபோன்ற வெற்றியைப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரியவில்லை. என்றாலும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட முடியும். கட்சிக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டுமானால், தலைமை மாற்றம் தவிர்க்கப்பட முடியாதது.

தற்போதைய நிலையில் அதற்கான அவசியம் கூட்டமைப்பில் உள்ள - தமிழரசுக் கட்சி உட்பட - கட்சிகளால் உணரப்பட்டாலும் இரா சம்பந்தனின் இடத்தை சுமந்திரன் பிடித்து விடுவாரோ என்ற அச்சம் பலரிடமும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. தற்போதைய நிலையில் அதற்கான சாத்தியம் அதிகமாகவே உள்ளதையும் மறுத்து விடுவதற்கில்லை.

வயோதிபத்தின் எல்லையில் உள்ள இரா சம்பந்தன் மரணத்தைத் தழுவும் நிலை உருவானால், கூட்டமைப்பில் உருவாகக் கூடிய தலைமைத்துவச் சண்டை எவ்வாறு அமையக் கூடும் என்பதை நினைக்கவே பயமாக இருக்கின்றது. அவ்வாறான ஒரு நிலையில் உருவாகக் கூடிய பங்காளிச் சண்டையில் தமிழ் மக்களின் பெரு விருப்புக்கு உரிய கட்சி சந்தி சிரிக்கும் நிலைக்கு ஆளாவதை விடவும், தற்போதைய நிலையிலேயே புதிய தலைவரைத் தெரிவு செய்யும் சத்திர சிகிச்சையை நடத்தி விடுவதே அனைவருக்கும் நல்லது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கை. கூட்டமைப்பு கருக் கொண்ட வேளையில், அதில் பங்கெடுத்த அனைவரும் இந்த உண்மையை அறிவர். எனவே, பொது நோக்கத்துக்காக விட்டுக் கொடுப்பைச் செய்தே ஆக வேண்டும். அது சண்டையில் நிகழ்வதை விடவும், சமரசமாக நிகழ்வதே நல்லது.




Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

IMPOrtas
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்



### பணம்

அன்னமிட்டவள் அன்னை.
அறிவு தந்தவர் தந்தை.
அரவணைத்தவர் உற்றார்
ஊஞ்சலாடுகிறது உறவு.
உறவுகள் தரம் பிரிக்கப் படுகின்றன.
உண்மைகள் பொய்யாகின்றன.
பணம் பேசுகின்றது.
மனம் அழுகின்றது.
பிணம் ஆகிப் போனல்
எதுவுமில்லை என்றாகும் போது
எதைக் கொண்டு செல்வாய்.

● கெங்கா ஸ்டான்லி

### வாழ்கை

ஒரே முகநூலில்
பிறந்த நாள் வாழ்த்தும்
நினைவஞ்சலியும்
வாழ்க்கை...

எதுவும் புரியாத போது
வாழ்க்கை தொடங்குகிறது
எல்லாம் புரியும் போது
வாழ்கை முடிகிறது

கேடயமும் போர்வாளும்
கேட்பாரற்றுக் கிடக்கிறது.
ஜால்ராக்கள் சங்கமமே
மேலோங்கி நிற்கிறது.
வீராப்பும் விளக்கவுரையும்
குப்பைக் கூடைக்குப்
போகையிலே..
நையாண்டியும், நளினமுமே
கைகொட்டிச் சிரிக்கிறது.
அச்சம் தவிர்ப்பதும்
அறம் வளர்ப்பதும்
தவறென்று ஆகிப் போனதால்..
பிச்சைப் பாத்திரங்களே
இப்போதெல்லாம்
அட்சயப் பாத்திரங்களாய்
அடையாளம் காட்டப் படுகிறது..!

மதம் இல்லாமல்தான்
வாழ்ந்து வந்தது யானை
காட்டிலிருக்கும் வரை... !

தீட்டிய மரத்திலேயே
பதம் பார்க்கிறது
மரங்கொத்தி
அது போலதான்
அன்பை கொட்டியவரையே
தாக்கி செல்கிறது
மனித காதல்



### மழை

மேகத்தில் பிறந்து
காற்றில் சரிந்து
புவியில் தவழ்ந்து
கடலிடம் சேர்ந்து
கலந்திடும்
கன்னிப்பெண்

"உளம் திறக்கும் உண்மைகள்...," என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# அகர கவிக்களம்...



## வலி
புன்னகைப்பதெல்லாம்
இதழ்கள் தான்
வாழ்வின் வலியை
கண்களே காட்டிக் கொடுக்கிறது

## அனுபவம்
சிலநேரங்களில் நாம் எடுக்கும்
பிழையான முடிவுகள்
நம்மை சரியான பாதையில்
செல்ல கற்றுக்கொடுக்கின்றன.

## உறவுகள்
நீ தேவைப்படும் போது
தேடப்படுவாய் அதுவரை
பொறுமையாக காத்திரு



---

எதையும் கொண்டாட
இயலவில்லை என்பதை விட
எதற்கும் திண்டாட
அவசியமில்லை என்பதே
ஆத்ம திருப்தி
பக்குவமென கொள்க.



---

பிறருக்காய் வாழ்வதிலும்
பிரியம் கொள்வதும்
பிரிவினை பாராது
அன்பு கொண்டு உதவுவதும்
அலாதி போதையாகும்
உரைத்தால் உணராது
உணர்வால் உணர்ந்திடு
ஊற்றெடுக்கும் அன்பு
உள்ளத்தில் தடையற

## காற்று
ஒரு முறையாவது
கடற்கரை மணலில் நின்று
காற்றைக் கேட்பேன்.
என்னைப் போல
உன்னைப் போல
அதற்கும் ஒரு சிநேகம்
தேவையா? என்று.

காற்றே நீ எப்பவும்
உனக்காக வாழ்ந்ததில்லை
இந்த உலகிற்கு
உயிராய் வாழ்கிறாய்.

நேசிக்கத் தெரியாத
மனிதர்களைக் கண்டால்
நீ கூட சூறாவளியாய்
மாறிவிடுகிறாய்.

## காதல்
சொல்ல வந்த வார்த்தைகளும்
மறந்து போனது
உன்னைக் கண்டதும்.

## மழை
என் மனசு ஏனோ முழுதாய்
நனைந்து
குளிரில் நடுங்குகிறது.

## நிலா
அழகிய நிலாவே
நீ தேய்ந்து பின்
வளர்வதேனோ?
வாழ்க்கையும் இப்படித்தான்
என்பதை எங்களிடம்
உணர்த்துவதற்கோ!!

● நந்து இலண்டன்

அவதானி

# உளவு நிறுவனங்கள்

புலம்பெயர் இலங்கைத் தமிழர்கள் உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தமை என்பது இலங்கையைக் கையாள்வதற்கு உளவு நிறுவனங்களுக்குச் சுலபமான பாதையை உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு நாட்டையும் பலம்பொருந்திய நாடுகளின் உளவு நிறுவனங்கள் உளவு பார்த்துக் கொண்டேதானிருக்கின்றன.

அரசியல் காரணங்களுக்காக அகதிகளாகப் புலம்பெயர்தல் ஏற்பட்டாலும் சரி, அரசியல் பழிவாங்கல் என்பதைச் சொல்லிக் கொண்டு பொருளாதார ரீதியான புலம்பெயர்தலாக இருந்தாலும் சரி அல்லது துறைசார் அறிஞர்களாக ஒரு நாட்டிலிருந்து, இன்னொரு நாட்டுக்குப் புலம்பெயர்தல் அல்லது குடியேறியவர்களாக இருந்தாலும் சரி இவர்கள் அனைவரையும் உளவு நிறுவனங்கள் உளவு பார்த்துக் கொண்டுதானிருக்கின்றன. புலம்பெயர்ந்தவர்கள், அவர்கள் புலம்பெயர்வதற்கான காரணமாக அமைந்திருக்கும் அதிருப்தியான விடயங்களைத் தொடர்ச்சியாக தமது மனதில் இருத்தியே வைத்திருப்பார்கள்.

புலம்பெயர்ந்த மக்களில் இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு இலங்கை அரசுக்கெதிரான மனநிலையையும், வெறுப்பையும் கொண்டிருப்பார்களோ அத்தகைய மனநிலையையும், வெறுப்பையும் அரசுகளின் அடக்குமுறைக்கெதிராகவோ, சமநிலையற்ற உரிமைப் பேணலால் தோற்றம், சுதந்திர உணர்வினால் தோற்றம் பெற்ற அரசுக்கெதிரான போராட்டங்களால் இன அழிப்புக்கு உட்பட்ட மக்கள், பல்நிலைத் தஞ்சம் தேடியும், கோரியும் வந்த மனநிலைக்கு ஒத்தாகவே இருக்கும்.

இத்தகையவர்களை உளவு நிறுவனங்களின் ஒற்றர்கள் அனுதாபிகளாகவும், ஆதரவாளர்களாகவும் அணுகுவார்கள். அவர்களை நம்பி உரிமை எண்ணம் கொண்டவர்கள் மெல்ல தமது போராட்டம் பற்றியும், தம்மை ஒடுக்குகின்ற அரசின் நிலைப்பாடு பற்றியும் சொல்லத் தொடங்குவார்கள்.

புலம்பெயராது போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்ற நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களை அணுகி, அவர்களின் அரசுக்கெதிரான மனநிலைகளை அறிந்து, அரசுகளைக் கையாள்வதைவிட தமது நாட்டுக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களின் அரசுக்கெதிரான மக்களைக் கையாள்வது எளிதிலும் எளிது.

அரசியல் தஞ்சம் கோரி ஏதிலிகளாக நிற்கும் மக்களுக்கு உதவி செய்வதற்கென்றே பல சமூக அமைப்புகள் உலகெங்கும் ஒவ்வொரு நாடுகளிலும் இயங்கி வருகின்றன. இச்சமூக அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள்கூட உளவு நிறுவனங்களின் ஒற்றர்களாக



செயல்படுபவர்களும் உண்டு. இவர்கள் எவருமே சந்தேகப்படாதவாறு அரசியல் தஞ்சம் கோரியவர்களுக்கான உதவிகளைச் செய்து, அவர்களிடமிருந்து பலதரப்பட்ட தகவல்களை அறிந்து கொள்வார்கள்.

இச்சமூக அமைப்புகளில் பணியாற்றுபவர்களும், தொண்டாற்றுபவர்களும் உதவிகள் செய்கின்ற மக்களுடனான அணுகுமுறைக்கான கல்வியைப் பெற்றவர்களாகவே இருப்பார்கள். ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோர் ஒரு குறிப்பிட்ட நாட்டை உடையவர்களாக இருக்க மாட்டார்கள். குறிப்பாக ஜேர்மனியை எடுத்துக் கொண்டால், கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னால் 108 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரு தகவல் இருந்தது. இப்பொழுது நாடுகளின் தொகை அதிகரித்திருக்கலாம்.

ஒவ்வொரு நாட்டு மக்களினதும் பழக்கவழக்கங்களும், பண்பாடுகளும் வித்தியாசமானதாகவே இருக்கும்.

இத்தகு மக்களுடன் பழகும் போது அந்தந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்து வைத்திருப்பதன் மூலமே, அவர்களுடன் பழகி எளிதாக தகவல்களை அறிந்து கொள்ள முடியும். உளவு நிறுவனங்களின் ஒற்றர்களுக்கு நாடுகளின், அரசுகளின் தன்மைகளும், மக்களின் குணாம்சங்களும் கல்வியாகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

முக்கியமான பாடங்களாக சமூகவியல், உளவியல் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு தனிமனிதனினதும் உளவியல் போக்கை ஆராய்வதன் மூலமாகவும், அதனைத் தெளிவறத் தெரிந்து கொள்வதன் மூலமாகவும் அவர்களிடமிருந்து அவரவர் சார்ந்த சமூகப் போக்கையும், அவரவர் அரசு சார்ந்த விருப்பு




வெறுப்புகளையும் அவர்களிடமிருந்து உள்வாங்க முடியும்.

ஒற்றர்களாகவும் பணிபுரியும் இத்தகையானவர்கள் தாம் உதவி செய்ய மட்டுமே வந்தவர்களாகக் காட்டிக் கொள்வார்கள். அரசுக்கெதிரான மனோபாவம் கொண்ட ஒருவருடன், சமூக சேவைப் பணியாளர் உரையாடும் போது அவர்கள், ஏதிலியான ஒருவருக்கு சார்பானவராகவும் அன்பு கொண்டவராகவும், அனுதாபம் கொண்டவராகவும் தம்மைக் காட்டிக் கொள்வதற்காக அமைதியாகவும், கருணை மிகுந்தவர்களாகவும் சொற்களை மிகக் கவனமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

சமூக அமைப்புகளில் பணிபுரியும் ஒற்றர்கள் தமது நாட்டுக்கு உளவு வேலை பார்ப்பவராக மட்டுமே இருக்க மாட்டார்கள். வேறு நாடுகளுக்கும் ஒற்றர் வேலை பார்த்து தகவல் கொடுப்பவராகவும் இருப்பார்கள். அரசியல் காரணத்திற்காகப் புலம்பெயர்ந்த ஒருவருடன் உரையாடும் போதே, அவரின் மனக்கிடக்கைகளை வெகு சுலபமாக அறிந்து கொள்வார்கள்.

சமூக அமைப்புகளின் அதிகாரிகளே ஒற்றர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் இனக்குழுமங்களுடன் கூட்டங்கள் என்ற சந்திப்புகளைத் தேநீர் விருந்துடன் ஏற்படுத்துவார்கள். இந்தகு சந்திப்புகளில் கலந்து கொள்ளும் இனக்குழும உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், தாம் புலம்பெயர்ந்த அரசியல் காரணங்களைச் சொல்லும் போது அதனை சமூக அமைப்பு அதிகாரிகள் எழுத்து மூலமாகப் பதிவு செய்து கொள்வார்கள்.

அதிகாரிகளுடன் அச்சமூக அமைப்பில் பணிபுரியும் அல்லது தொண்டாற்றுபவர்களில் சிலரும் கலந்து கொள்வார்கள். இவர்கள் அனைவருமே இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரினதும் அரசுக்கெதிரான உள்ளக் கிடக்கைகளை ஒவ்வொரு விதமாக எடைபோட்டு, அதனைக் குறிப்பெடுத்துக் கொள்வார்கள்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் சமூக அமைப்புப் பணியாளர்களிடம் ஒருமித்த போக்கும் வேறு வேறான போக்கும் இருக்கும். உதாரணமாக இச்சமூக அமைப்பு அதிகாரி தனது நாட்டுக்காக உளவு பார்ப்பவராகவும், வேறு நாடுகளுக்கு உளவு பார்ப்பவராகவும் இருப்பார். ஆனால் அதனைப் பணியாளர்கள் அறிந்து கொள்ளாதவாறு அந்த அதிகாரி நடந்து கொள்வார்.

சமூக அமைப்புக்கு இனக்குழுமங்கள் தாம் சார்ந்த அரசுகள் மீதான வெறுப்பினை உமிழ்பவர்களாக இருப்பதும், அதனை இயல்பாகவே தாம் அனுதாபத்துடன் கேட்பராக இருப்பாரெனினும், இவரும் மற்றைய நாடுகளுக்கு உளவு பார்ப்பதைத் தமது அதிகாரிகள் அறிந்து கொள்ளா வண்ணம் தனது உளவு வேலையைச் செய்வார்கள்.

ஒரு சக்தி வாய்ந்த உளவு நிறுவனம், ஒரே சமூக அமைப்பில் வேலை செய்பவர்களைத் தமக்கு உளவு பார்ப்பதற்காக ஒன்றாக இணைந்து செயல்படுவதையும், தனித்துத் தனித்து செயல்படுவதையும் தமது வேலைத் திட்டத்தின் மூலம் மிகத் துல்லியமாகச் செயல்படுத்துவார்கள்.

இக்கட்டுரையின் ஆரம்பப் பகுதிகளிலும், பின்னரும் பல இடங்களில் திரும்பத் திரும்ப உளவு நிறுவன ஒற்றர்களை தம் சொல்படியும், திட்டப்படியும் ஆட்டிப்படைப்பதற்கு எத்தகைய அணுகுமுறைகளை உளவு நிறுவனங்கள் கையாண்டு வருகின்றன என்பது குறிக்கப்பட்டிருக்கின்றது.

அவை, பெண், பொருள், பணம் என்பவையே. அவரவர் பலவீனத்திற்கமைய இந்த மூன்றும் அல்லது இந்த மூன்றுகளில் அவரவரின் பலவீனங்களுக்குத் தக்கதாகப் பரிசளிக்கப்படுகின்றது.

உளவு பார்ப்பதற்கு தகவல் சொல்பவர்களின் பலவீனமே முதலீடாகின்றது. சமூக அமைப்புகளில் பணிபுரிபவர்கள் தமது நாட்டுக்குத் துரோகம் செய்யாமலும், மற்றைய நாடுகளுக்கு ஒற்றர் வேலை செய்வார்கள்.

உளவு நிறுவனக் கல்வி என்பதும், அதற்கான பயிற்சி என்பதும், மற்றைய துறைசார் கல்விக்கு மேலானது. சூழ்ச்சி செய்தல், சதி செய்தல் மிக முக்கிய பாடங்களாகும். இத்துறைசார் கல்வியில் கலாநிதிப் பட்டங்கள் பெற்றவர்களே இப்படிப்புக்கான பேராசிரியர்களாகவும், பயிற்சியாளர்களாகவும் இருப்பார்கள்.


புலம்பெயர்ந்து இனக்குழும மக்களைக் கொண்டிருக்கும் நாடுகள், தமது நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் மக்களைக் கண்காணிப்பதற்கென்று காவல்துறையின் ஒரு பகுதியாக இயங்கும் புலனாய்வாளர்களை நியமிப்பதுடன் நின்று விடுவதில்லை. சமூக அமைப்புகளின் உதவியையும் நாடுவார்கள். சமூக அமைப்புகளில் காவல்துறையினரின் புலனாய்வாளர்களே தொண்டர்களாகவும், அதிகாரிகளாகவும் பணிபுரிவதுண்டு.

அவரவர் நாட்டு அரசுக்கெதிரான அதிருப்தியைத் தகவல்களாக இனக்குழுமங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் சமூக அமைப்பு தனது பணியாளர்களுடனும், தொண்டர்களுடனும் தாம் பெற்றுக் கொண்ட அரசியல், பொருளாதார தகவல்களைப் பற்றிக் கலந்துரையாடி அறிக்கைகளைத் தனது சமூக அமைப்பின் தலைமைப் பீடத்திற்கும், தனது நாட்டு அரசுக்கும் அறிவிக்கும்.

(தொடரும்)


**Dortmund மாநகரில்....**

**தமிழர் அரங்கம் கல்விக் கூடம்**




**யேர்மன் மொழி வகுப்புகள்**
அடிப்படையில் இருந்துபயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**
பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**
தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**
டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**



பாகம் : 28

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

# இன அரசியல் இன எழுச்சி எவ்வாறு ஏற்படுகிறது

இன்று தமிழினம் ஈழத்திலும், தமிழகத்திலும் தனது இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. ஆனால் பெரும்பாலான மக்கள், குறிப்பாகத் தமிழகத்தில் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. நம்மால் மக்களிடையே ஒரு இன எழுச்சியை உருவாக்க முடிந்தால், நமது சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது எளிதாகும். அனைத்து தமிழ்த் தேசிய அரசியல் செயல்பாடுகளின் அடிப்படை நோக்கமும், அதுபோன்ற ஓர் எழுச்சியை உருவாக்குவதே!. அதற்கான நமது சிந்தனைகள் எப்படி இருக்கின்றன என்றால்..

*1)* மக்களுக்குச் சிக்கல்களைப் பற்றிய அறிவு இல்லை. அதனால் அவர்களிடம் சிக்கல்களைப் பகுத்தறிவைக் கொண்டு விளக்கிப் புரிய வைத்தால், மக்கள் ஒன்று திரண்டு ஆதரிப்பர்.

*2)* மக்கள் சாதிமத மூடநம்பிக்கைகள் கொண்டு பகுத்தறிவற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் பகுத்ததறிவற்ற சிந்தனைகளைக் களைந்து, பகுதித்தறிவு உள்ளவர்களாக மாற்றினால், நமது அனைத்து சிக்கல்களும் தீரும்.

*3)* அடிப்படையில் நமது அனைத்து சிக்கல்களுக்குமான தீர்வுகள் பகுத்தறிவின் மீது கட்டப்பட்டிருக்கிறது. பகுத்தறிவுதான் நமது செயல்பாடுகளின் மையமாக இருக்கும் ஆயுதம்.

நாம் ஒரு சிக்கலைத் தீர்க்க திட்டமிடும் பொழுது, சில நேரம் நம்மை அறியாமல், அறிந்தாலும் தீர ஆராயாமல், சில கருதுகோள்களை உண்மை என்று எடுத்துக் கொண்டு செயல்படுவோம். அவ்வாறு நமது சிந்தனையில் இருக்கும் ஓர் அடிப்படை கருதுகோள் என்னவென்றால், மனிதன் அடிப்படையில் பகுத்தறிவானவன், அவனின் தவறுகள் அறியாமையால் வருவது, விளக்கிப் புரிய வைத்தால் திருந்தி விடுவான். அடிப்படையில் பகுத்தறிவு என்பது நமது எசமானான்.

**இப்பொழுது இந்தக் கருதுகோள் தவறு என்றால் என்னவாகும்?**

ஒரு சுத்தியை எடுத்தவனுக்கு பார்ப்பதெல்லாம் ஆணியாகத் தெரிவது போல, பகுத்தறிவு என்ற ஆயுதத்தை எடுத்த நமக்கு, பார்ப்பதெல்லாம் அறியாமையாகத் தெரிகிறது. கடந்த சில பத்தாண்டுகளாக நடந்த உளவியல், மூளை நரம்பியல் ஆராய்ச்சிகள் "பகுத்தறிவு உணர்வுகளுக்கு அடிமை" என்ற நமது கருதுகோளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது. இது அடிப்படையில் நமது அரசியல் செயல்பாடுகள் அனைத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறது. ஆயிரக்கணக்காக பகுத்தறிவாளர்கள் அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பல மேடைகளில் பேசியும், மக்களை இன்னும் பகுத்தறிவாளர்களாக ஆக்க முடியவில்லை. அது ஏன்? என்பது இப்பொழுது விளங்குகிறது. அவர்களால் இவ்வளவு காலம் பேசியும் கூட்ட முடியாத கூட்டத்தை, பேசவே முடியாத ஒரு சல்லிக்கட்டு மாடு கூட்டிவிட்டது.

அறிவியலாளர்கள் இந்தப் புதிய அறிவினைக் கொண்டு, எவ்வாறு அரசியல் நடத்தப்படுகிறது? மக்கள் எவ்வாறு வாக்களிக்கின்றனர்? எவ்வாறு தேசியம் செயல்படுகிறது? இனச்சிக்கல்கள், இனப்போர்கள் எவ்வாறு தோன்றுகின்றன? என்று புதிய கோணத்தில் ஆய்ந்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சிகளிலிருந்து நாம் என்ன கற்கலாம் என்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

**அரசியலில் உணர்வும் பகுத்தறிவும்:**

பொதுவாக மனிதன் பகுத்தறிவானவன் என்ற கருதுகோள் அடிப்படையிலேயே அரசியல் செயல்பாடுகள் அலசப்பட்டு வருகின்றன. ஆனால், உண்மையில் மக்கள் அரசியலைப் பற்றிச் சிந்திப்பதில்லை, மாறாக அவர்களின் உணர்வுகளின் வழியாக அரசியலைப் பார்த்து, எது பிடித்திருக்கிறதோ அந்த அரசியலை ஆதரிக்கின்றனர். தீர விசாரித்து, நன்மை, தீமைகளைக் கணக்கிட்டு எடுக்கப்படுவதல்ல. அரசியலில் உணர்வுக்கும், பகுத்தறிவிற்கும் இடையேயான மோதலில், உணர்வுகளே எப்பொழுதும் வெல்கின்றன என்கிறார் வெசுடன். அரசியலில் உணர்வுகள்தான் முக்கியம், உண்மையோ அல்லது ஆதாயமோ அவ்வளவு முக்கியமல்ல.




*"In politics, when reason and emotion collide, emotion invariably wins."*

மனிதர்கள் பகுத்தறிவுடன் சிந்தித்து முடிவெடுப்பதாக இருந்தால், அரசியல்வாதிகள் பேசுவதற்கு ஒன்றுமே இருக்காது. எல்லாம் வெட்டிப் பேச்சாகவே இருக்கும். உண்மையில் என்ன நடக்கிறதென்றால், அரசியல்வாதிகள் மக்களைப் பகுத்தறிவினால் பேசி ஈர்ப்பதில்லை, மாறாக அவர்களின் அடையாளம் (சாதி, மதம்), சித்தாந்தம், வெறுப்பு, பயம், காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றின் அடிப்படியில் உணர்வுகளைத் தூண்டி ஈர்க்கிறார்கள்.

பொதுவாக ஒருவர் எந்த அரசியலை ஆதரிக்கிறார்? என்பதை அறிய அவருக்கு என்ன ஆதாயம் என்று பார்க்கக் கூடாது, மாறாக அவர் எது மாதிரியான பாரபட்சங்கள், விருப்பு, வெறுப்புக்களைக் கொண்டுள்ளார். எது உணர்வுகளைத் தூண்டும் என்று பார்க்கவேண்டும். ஒருவர் தனக்கு முக்கியம் என்று கருதுவது எதுவும் உணர்வுகளுடன் தொடர்புடையது. முக்கியமானதை இழந்தால் உணர்வுகள் வருத்தத்தை அளிக்கும். நாம் இழந்தால் வருத்தப்படாத ஒன்றை முக்கியமாகக் கருதமுடியாது.

ஏன் உணர்வுகள் இவ்வளவு முக்கியமானதாக செயல்படுகிறது என்பதற்கு, நமது மூளையின் வடிவமைப்புதான் அடிப்படைக் காரணம். பகுத்தறிவு என்பது பரிணாம வளர்ச்சியில் மூளையில் உருவான கடைசி அடுக்கு. அது உணர்வுகளை உருவாக்கும் அடுக்கின் மீது கட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக உணர்வுகளின் வழியாகப் பகுத்தறிவு செயல்படுவதால், உணர்வுகளுக்குப் பகுத்தறிவு அடிமையாக இருக்கிறது. பகுத்தறிவு இல்லாவிட்டால் நாம் விலங்கு போல அறிவின்றி செயல்படுவோம். உணர்வுகள் இல்லாவிட்டால், ஒரு சமூகத்தில் மனிதனாக செயல்படவே முடியாது.

சில உளநோய் **(psychopath)** உள்ளவர்கள் கொடிய கொலைகள் புரிவதற்கு முக்கியக் காரணம் அவர்களுக்கு உணர்வுகள் இல்லாததுதான். உணர்வும், அறிவும் இனைந்துதான் செயல்படுகின்றன. நாம் உணர்வுகள் காட்டும் திசையில் பகுத்தறிவு செயல்படுகிறது. பகுத்தறிவு என்பது ஒரு வக்கீல் போன்றது. உணர்வு எதை சரி என்று சொல்கிறதோ, அதை நியாயப்படுத்தும் ஒரு வக்கீல்தான் பகுத்தறிவு உள்ளது என்கிறது உளவியல் ஆராய்ச்சிகள்.

உதாரணமாக தொலைக்காட்சி அல்லது முகநூல் விவாதங்களில், யாரவது "நீங்கள் சொல்வது சரி" என்று பகுத்தறிந்து கட்சி தாவி பார்த்து இருக்கிறீர்களா? உண்மையில் என்ன நடக்கிறதென்றால் அனைவரும் உணர்வுகளின் அடிப்படையில் ஒரு முடிவை எடுத்துவிட்டு, அதற்குச் சாதகமாக ஒரு வக்கீலைப் போல நியாயம் கற்பிக்கிறார்கள். உணர்வுகளே அனைத்து முடிவையும் எடுப்பதில்லை. சில விடயங்களில் உணர்வுகள் பகுத்தறிவின் கையில் முடிவெடுக்கும் பொறுப்பைக் கொடுத்து விடும். உணர்வுகள் என்பது ஒரு முட்டாள் எசமானான் போல. பகுத்தறிவு



யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி

# Jasmine Silk House

2023ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும்
அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்





**Fester Str.50, 40882 Ratingen**
**Tel : 021 028 447 44**
**Mob. : 0173 1937 325**

எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

அவன் சொல் கேட்டு நடக்கும் ஒரு புத்திசாலியான அடிமை.

## இன அரசியல்:

உணர்வுகளின் முக்கியத்துவத்தை அடைப்படையாகக் கொண்டு சுடுவர்டு காஃப்மன் ***(Stuart Kaufman)*** அவர்கள் இன அரசியலை ஆராய்ந்து "குறியிட்டு அரசியல் தத்துவம்" ***(Theory of Sybmolic Politics)*** என்று ஒரு தத்துவத்தை வெளியிட்டுள்ளார். இது நமது அரசியல் சிக்கல்களைப் புரிந்துகொள்ள மிகவும் பயனுள்ளதாக இருப்பதால் இனி இதைப்பற்றி விரிவாகப் பார்ப்போம்.

இன அரசியலின் அடிப்படையாக இருப்பது வரலாற்றுக் கற்பிதங்கள். அவை எவ்வாறு ஓர் இனத்தையும், அதன் அண்டைய இனங்களையும் விவரிக்கிறது என்பது இன அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த கற்பிதங்கள் அண்டைய இனங்களைப் பற்றிப் பாரபட்சங்களையும் ஓரவஞ்சனைகளையும் கற்பித்தால், அது இனங்களுக்கிடையே பயத்தை உருவாக்குகிறது. அவற்றை அரசியல் தலைவர்கள் பயன்படுத்தி கருத்துருவாக்கம் செய்து, மக்களின் ஆதரவைப் பெறுகின்றனர். பின்பு அந்த ஆதரவின் துணையுடன் நல்ல பரவலாக்கப்பட்ட அடிமட்ட அமைப்புகளை உருவாக்கி, மக்களை இன்னொரு இனத்திற்கு எதிராக அணி திரட்டுகின்றனர்.

## கற்பிதங்கள் (Narratives):

ஓர் இனம் என்பது ஒரு பெரிய கற்பிதக் குடும்பம். அவர்கள் ஒரு பொதுவான மரபுவழியில் வந்தவர்கள் என்ற நம்பிக்கையாலும் (உண்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை), பொதுவான வரலாற்று நினைவுகள், பொதுவான பண்பாடு ஆகியவற்றின் மூலம் ஒரு குழுவாகப் பிணைக்கப்படுகின்றனர். இந்த கற்பிதக் கூறுகள் யார் குழுவின் உறுப்பினர், யார் இல்லை, இனக் குறியீடுகள், இனத்தின் பொற்காலம், இறந்த காலம், அழிவு காலம், எது புனிதம், எது பூர்வீகம், யார் மாவீரர்கள், யார் எதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்கி, இன அடையாளக் கற்பிதங்களின் மையமாக இருக்கிறது. இந்தக் கற்பிதங்கள் மூலம்தான் நிலத்தை காக்கவேண்டும், அடையாளத்தை காக்கவேண்டும் (மொழி அல்லது மதம்), மாவீரர்களைப் போற்றவேண்டும், எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் வருகிறது.

உதாரணமாக, சிங்கள தேசியத்திற்கும், அதன் தமிழின அழிப்பிற்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சிங்களர்களின் மகாவம்சக் கட்டுக்கதைகளே என்கிறார் கேப்வெரர்:

***Sinhalese nationalism is constructed out of its myths of history and the deeds of its heroes, wherein Tamils threaten to destroy or subsume Sinhalese but are themselves conquered and destroyed. These ideas are integral to the modern social and political practice of nationalism in Sri Lanka and are part of a current tragedy, and in the fires of its passions, Sinhalese, and especially Tamils, are being consumed.***

தமிழர்களுக்கு எதிரான இனப்போருக்கு சிங்களர்களின் இந்த மகாவம்ச மனநிலைதான் அடிப்படை காரணம் என்று பிரபாகரன் அவர்கள் ஏறக்குறைய ஒவ்வொரு மாவீரர் உரையிலும் கூறியிருக்கிறார். நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் ருத்ரகுமாரன் அவர்களும் இனப்படுகொலைக்குக் காரணமாக இதையே கூறுகின்றார்.

***"None of these pogroms are spontaneous outbursts of anger, nor are they random acts of violence. They are expressions of a genocidal intent against the Tamils, institutionalized within the Mahavamsa mindset of the Sinhala nation. The architect of Black July, JR Jayewardene, and the brain behind Mullivaikkaaal, Mahinda Rajapaksa, both had the same doctrine to guide them, the doctrine of Tamil Genocide."***


**24 மணிநேர தகவல் உதவிச் சேவையுடன்**

V BOX



**300 க்கும் மேற்பட்ட Channels மற்றும் 5,000க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்**

**இப்போது அனைத்து நாடுகளிலும்**




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

**REACH OUR DISTRIBUTORS**

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168


**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780

Smt. லிதியா மயூரன், சுவிஸ்

*இந்த முறை அகர இதழில் பார்க்க இருப்பது பதாகஹஸ்த விநியோகம்*

## பதாக விநியோகஹ



“நாட்யாரம்பே வாரிவாஹே வனே வஸ்துநிஷேதனே
குசஸ்தலே நிஷாயாம்ச நத்யாம் அமரமண்டலே
துரங்கே கண்டனே வாயெள சயனே கமனோத்யமே
ப்ரதாபேச ப்ரஸாதேச சந்த்ரிகாயாம் கனாதபே
கவாட பாடனே ஸப்தவிபக்த்யர்தே தரங்ககே
வீதி ப்ரவேசபாவேபி ஸமத்வேச அங்கராககே
ஆத்மார்தே சபதே சாபி தூஷ்ணீம் பாவநிதர்ஷனே
தாலபத்ரேச கேடேச த்ரவ்யாதி ஸ்பர்ஷனேததா
ஆசீர்வாத க்ரியாயாம்ச பர்பசிரேஷ்டஸ்ய பாவனே
தத்ர தத்ரேதி வசனே ஸிந்தௌச ஸுக்ருதிக்ரமே
ஸம்போதனே புரோகேபி கட்கரூபஸிய தாரனே
மாஸே ஸம்வத்ஸரே வர்ஷதினே ஸம்மார்ஜனேத்தா
ஏவமர்தேஷு யுஜ்யந்தே பதாக ஹஸ்த பாவனாஹ”

### கருத்து:

*1. நாட்யாரம்பே - நடனத்தின் ஆரம்பம்*
*2. வாரிவாஹே - முகில்கள்*
*3. வனே - காடு*
*4. வஸ்துநிஷேதனே - பொருட்களை மறுத்தல்*
*5. குசஸ்தலே - மார்பு*
*6. நிஷாயாம்ச - இரவு*
*7. நத்யாம் - நதி*
*8. அமரமண்ட லே - தேவலோகம்*
*9. துரங்கே - குதிரை*
*10. கண்டனே - வெட்டுதல்*
*11. வாயெள் - காற்று*
*12. சயனே - நித்திரை*
*13. கமனோத்யமே - முன்னேறுதல்*
*14. ப்ரதாபேச - புகழ்தல்*
*15. ப்ரஸாதேச - அநுக்கிரகம்*
*16. சந்த்ரிகாயாம் - நிலவொளி*
*17. கனாதபே - தாங்கமுடியாத வெப்பம்*
*18. கவாடபாடனே - கதவை மூடித்திறத்தல்*
*19. ஸப்தவிபக்த்யர்தே - ஏழு வேற்றுமை உருபுகள்*



20. தரங்கசே - அலை
21. வீதி ப்ரவேசபாவேபி - வீதியில் பிரவேசித்தல்
22. ஸமத்வேச - சமத்துவம்
23. அங்கராககே - அங்கங்களைத் தொடுதல்
24. ஆத்மார்தே - தன்னைக் குறித்தல்
25. சபதே சாபி - சத்தியம் செய்தல்
26. தூஷ்ணீம் பாவநிதர்சனே - தீயதை நிராகரித்தல், அமைதி
27. தாலபத்ரேச - பனை ஓலை
28. கேடேச - கேடயம்
29. த்ரவ்யாதி ஸ்பர்ஷனேததா - பொருட்களைத் தொடுதல்
30. ஆசீர்வாத க்ரியாயாம்ச - ஆசீர்வதித்தல்
31. ந்ர்பசிரேஷ்டஸ்ய பாவனே - சக்கரவர்த்தி
32. தத்ர தத்ரேதி வசனே - இங்கு, அங்கு எனல்
33. ஸிந்தௌச - கடலலை
34. ஸுக்ருதிக்ரமே - நற்செயல்கள்
35. ஸம்போதனே - ஒருவரைக் காட்டடல்
36. புரோகேபி - முன் செல்லல்
37. கட்கரூபஸ்ய தாரனே - வாளை ஏந்துதல்
38. மாஸே - மாதம்
39. ஸம்வத்ஸரே - வருடம்
40. வர்ஷதினே - மழை நாள்
41. ஸம்மார்ஜனேத்தா - தூட்டுதல்

பதாக ஹஸ்த விநியோகம் மனிதர்களின் வாழ்வில் ஒவ்வொரு அசைவிலும் சித்தரிக்கப்படுகின்றது. உதாரணமாக ஒரு தாய், தனது பிள்ளைக்கு ஆகாயத்தைக் காட்டும் போது, பதாக முத்திரை பயன் படுகிறது. இவையாவும் பதாக முத்திரையினால் செய்யலாம்.

அடுத்த அகரம் இதழில் திரிப்பதாக, அர்தப்பதாக மற்றும் கர்த்தரிமுக விநியோகம் பற்றிப் பார்ப்போம்.



## சிறுகதை

# வைர நெஞ்சம்

“அம்மா.. நேத்து உடம்பு பூரா நோவுதுன்னு புலம்பிக்கிட்டு இருந்தீங்களே.. முடக்கத்தான் கீரை கொண்டு வந்திருக்கேன். அரிசி, உளுந்து ஊறப் போட்டு இதையும் சேர்த்து அரைச்சு, நாளைக்கி தோசைச் சுட்டுச் சாப்பிடுங்க. லேசா கசப்பா, பச்சை கலர்லே இருக்கும். ஆனா அப்புறம் பாருங்க.. உடம்பு வலி, வாயுக் கோளாறு ஓடியே போயிடும்..” என்று கீரைக் கூடையை இறக்கினாள் பாக்கியம்.

முடக்கத்தான் கீரைக்கட்டைப் பிரித்து, உட்கார்ந்து இளம் கீரையாகச் சாவகாசமாக ஆய்ந்து போட ஆரம்பித்தாள். அவள் தோளில் சாய்ந்து நின்ற அவளது கடைக்குட்டி வனிதா, முப்பட்டையான முடக்கத்தான் காயை நெற்றியில் பட்பட்டென அடித்து, வெடிக்க வைத்துச் சிரித்தது. மற்றொருநாள் சின்னச்சின்ன இலைகளுடன், ஒரு கிளையை ஒடித்துக் கொண்டு வந்தாள்.

“அய்யா மூட்டுவலியில கஷ்டப் படறார்னு சொல்வீங்களே.. தேடிப் பிடிச்சு வாதநாராயணன் கீரையைக் கொண்டு வந்திருக்கேன். இலையை உருவித் தரேன். நெய் விட்டு வதக்கி, காஞ்ச மிளகாய், உளுந்து, பெருங்காயம் வறுத்து, உப்பு, புளி வெச்சு துவையல் அரைச்சுக் கொடுங்க. மருந்து, மாத்திரை எதுவுமே வேணாம். மூட்டு வலிக்கு சூப்பரா கேட்கும்!”

இப்படித்தான் பாக்கியம் எனக்கு அறிமுகமானாள். என் பிள்ளைகள் வெளிநாடுகளில் செட்டில் ஆகிவிட, ஓய்வு பெற்ற என் கணவருடன், எப்போதோ வாங்கிப் போட்டிருந்த ஒதுக்குப்புறமான முக்கால் கிரவுண்ட் நிலத்தில், வீடு கட்டிக் கொண்டு குடி வந்தோம். அப்போது தான் வீடுகள் வரத் தொடங்கியிருந்தன. கடைகண்ணி என்றால் கொஞ்சதூரம் போக வேண்டும். எனக்கு நீரழிவு நோய் ஆரம்பம் என்பதால், டாக்டர் தினம் ஒரு கீரை சாப்பிடச் சொல்லி அறிவுறுத்தினார். வாசலில் எப்போது கீரை வரும், காய் வரும், பழம் வரும் என்று தினம் பழி கிடந்து தான் வாங்க வேண்டும். தவற விட்டுவிட்டால் கடைக்கு நடக்க வேண்டும்.

தினமும் நான் வாசலில் காத்துக் கிடப்பதைப் பார்த்த கீரைக்கார பெண்மணி பாக்கியம், “எதுக்கும்மா இப்படி மணிக்கணக்கிலே காத்துக் கிடக்கறீங்க? தினம் தவறாமே நானே கொண்டு வந்து தரேனே”. என்று வந்து ஒட்டிக் கொண்டாள்.

அது போல தினம் ஒரு வகை கீரையாகப் பார்த்து எடுத்து வந்து கொடுப்பதோடு, அதைச் சுத்தம் செய்து நறுக்கி கொடுத்துவிட்டு போகும் அளவுக்குப் பழக்கமாகி விட்டாள். அவளைப் பற்றிய விவரங்களையும் பேச்சோடு, பேச்சாக வெளியிட்டாள். புருஷன் இறந்து இரண்டு வருடமாகிறதாம். இரண்டு ஆண் பிள்ளை, இரண்டு பெண் என நான்கு குழந்தைகள். தினம் மூன்று வேளையும், ஐந்து ஜீவன்கள் அரை வயிறாவது சாப்பிட வேண்டும். காலையில் கீரை, காய்கறி வியாபாரம், மதியம் பூக்கடைகளுக்குப் பூ கட்டிக் கொடுக்கிறாள். மாலை அம்மன் கோயில் வாசலில் கற்பூரம், நெய் விளக்கு விற்கிறாளாம். இவ்வளவு



பாடுபட்டும் பிள்ளைகளுக்கு வயிறார சாப்பாடு போட முடியவில்லை என என்று புலம்புவாள்.

எனக்குப் பரிதாபமாக இருக்கும். இத்தனை கஷ்டத்தில் நான்கு குழந்தைகள் தேவையா? இரண்டுடன் நிறுத்திக் கொண்டிருக்கலாமே என்று கேட்க தோன்றும். 'நமக்கேன் வம்பு' என்று வாயை மூடிக் கொள்வேன். ஒரு நாள் வரும் போதே பாக்கியம் சோர்வாக வந்து உட்கார்ந்தாள்.

"நைட்டு பூரா தூக்கமில்லே. தலை ரொம்ப நோவுது" என்றாள் முனகலாக.

"மாத்திரை போடறதுதானே.. இரு, சூடா காஃபி தரேன்".

அவள் கூச்சத்துடன் மறுப்பதை காதில் வாங்காமல் காஃபி கலந்து எடுத்து வந்தேன். பாக்கியம் மாத்திரையைப் போட்டுக் கொண்டு காப்பியைக் குடித்தாள். தம்ளரைக் கழுவுவதற்காகப் போனவள் கிச்சன் சிங்கை எட்டிப் பார்த்தாள்.

"அம்மா தப்பா நினைக்கலேன்னா.. தினம் இதே நேரம் வந்து பாத்திரம் தேய்ச்சு, துணி துவைச்சிட்டுப் போகட்டுமா?"

அதுவும் சரியென்றே பட்டது. அவள் வறுமையைக் குறைக்க என்னாலான சிறிய உதவி. கணவரைப் பார்த்தேன். அவரும் தலையசைத்து சம்மதித்தார்.

அது போல தினம் வரத் தொடங்கினாள். வந்ததும் கீரைகள், காய்கறிகளை சுத்தம் செய்து நறுக்கிக் கொடுப்பாள். பாத்திரம் கழுவி, துணி துவைத்துக் காயப் போட்டுவிட்டு, நான் கொடுக்கும் காப்பியைக் குடித்துவிட்டுப் போவாள். அதோடு நில்லாமல் வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை என்று வீட்டைத் துடைத்துக் கொடுப்பாள். வாரம் ஒரு தடவை ஒட்டடை அடிப்பாள்.

லீவு நாட்களில் அவள் பிள்ளைகள் அவளோடு வருவார்கள். அங்குமிங்கும்




ஓடிச் சத்தம் போட்டு அமர்க்களம் செய்யாமல், அமைதியாக 'ஹோம் வொர்க்' செய்து கொண்டிருப்பார்கள்.

என் கணவர் பிஸ்கெட் பாக்கெட்டை நீட்டியபடி "பெயர் என்ன? என்ன படிக்கிறீங்க?" என்று அன்புடன் விசாரித்தார்.

பெரிய பையன் மரியாதையுடன் கைகட்டியபடி எழுந்து நிற்க, மற்றவர்களும் அதே போல் எழுந்து நின்றனர்.

"என் பேரு கண்ணன், ஆறாவது படிக்கிறேன். இவ பூங்கொடி, நாலாவது படிக்கிறா. இவன் ஏழுமலை ரெண்டாவது, இது வனிதா.. இன்னும் ஸ்கூல் சேர்க்கலை" என்று பணிவுடன் பதில் சொன்னான்.

முதல் நாள் அவர்கள் வந்த போது மிகுந்திருந்த டிபனைக் கொடுத்த நான், பிறகு அவர்களுக்கென்றே அதிகமாக தயாரிக்கத் தொடங்கினேன்.

மாவு அரைக்க, சோப், கடுகு, டீத்தூள், பால் பாக்கெட் என்று ஏதேனும் அவசரத் தேவைக்கு சைக்கிளில் போய் வாங்கி வர, கண்ணன் உதவியாக இருந்தான்.

இப்படியாக பாக்கியமும், அவள் பிள்ளைகளும் எங்களில் ஒருத்தராக ஆகிவிட்டனர்.

ஒரு நாள் சமையல் அறை சிங்க்கில் தண்ணீர் கசிகிறதென்று ப்ளம்பரை அழைத்து வந்தார் என் கணவர்.

"அண்ணே.. நல்லா இருக்கீங்களா?" என்று விசாரித்தாள்.

ப்ளம்பர் திரும்பினாள்.

"அட.. பாக்கியமா? இங்கேயா வேலை செய்யறே? கீரை வியாபாரம் என்னாச்சு?" என்று விசாரித்தார்.

"அதுவும் ஒரு பக்கம் இருக்குது. வருமானம் பத்தலை அண்ணே.. அதான் அம்மா வீட்டுல வேலை செய்யறேன்".

பாக்கியம் மாடியேறிப் போனாள்.

ப்ளம்பர் அனுதாபத்துடன் சூள் கொட்டினார்.

"எங்க ஊர் பொண்ணுதாங்க. தங்கச்சி முறையும் கூட. நல்லாதான் கட்டிக் கொடுத்தாங்க. அதோட தலையெழுத்து புருஷங்காரன் சரியில்லே, குடிகாரன். இன்னொரு பொண்ணோட வேற பழக்கம். தினம் இதுக்கு அடி உதை தான். அப்புறம் பாக்கியத்தை விட்டுட்டு அந்த பொம்பளை கூடவே போயிட்டான். கட்டட வேலை செய்யறவன். அந்த பொம்பளைக்கும் அதே வேலை தான். ஒரு நாள் புதுக் கட்டடத்தோட உத்தரம் இடிஞ்சு விழுந்து, இவங்க ரெண்டு பேருமே நசுங்கி செத்துட்டாங்க. பாவங்க பாக்கியம். புருஷன்னு ஒருத்தன் உயிரோடவாவது இருந்தான். அதுவும் போயிடுச்சு".

அவர் சலிப்புடன் சொல்லச் சொல்ல எங்களுக்கு பாக்கியத்தின் மேல் பரிவும், பாசமும் அதிகமாயிற்று. ஆறு மாதம் ஆகியிருக்கும் வேலை முடித்து விட்டுக் கிளம்பிய பாக்கியம் தயங்கி நின்றாள்.

"என்ன பாக்கியம்?" என்று கேட்டேன்.

"ஒரு ஐநூறு ரூபாய் முன் பணமா தரீங்களா?" சம்பளத்திலே கழிச்சுக்குங்க. அதோட வர புதன் கிழமை வேலை செய்ய வர மாட்டேன். சேர்த்து வைங்க. மறுநாள் செஞ்சு கொடுத்திடுவேன்.

"என்ன விசேஷம் அன்னிக்கி?"

"அது.. வந்து.. எங்க வீட்டுக்காரருக்கு திதி கொடுக்கணும். புடவை-வேட்டி, இனிப்பு, பழம் எல்லாம் வெச்சு படைக்கணும்".

சட்டென கோபம் வந்தது எனக்கு.

"உன்னை அம்போன்னு விட்டுட்டு, இன்னொருத்தி பின்னாலே ஓடின உன் புருஷனுக்கு நீ திதி கொடுக்கிறது ரொம்ப முக்கியமா?"

"என்னம்மா செய்ய.. தாலி கட்டிட்டாரு. புள்ளைகளையும் கொடுத்துட்டாரு. செய்ஞ்சுதானே ஆகணும்?"

**DORTMUND மாநகரத்திலே**
**தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்**
**உணவுப்பொருட்களை மொத்தமாக**
**பெற்றுக்கொள்ள நாடுங்கள்**

StaR-Impex



**Lebensmittel Grosshandel e.K.**

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

Rabeena Since 1986 We've Mastered Taste
Aachi The Mother of Good Taste
BTM
Double Horse
Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்



MDH · Laziza International · Cock Brand · Daawat The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice · Nestlé · PG tips · Niru · Aroy-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila

“எப்படியோ போ.. உன்னையெல்லாம் திருத்தவே முடியாது.. அது சரி.. உன் புருஷனுக்குத் திதின்னா வேட்டி மட்டும் தானே வாங்கணும்? எதுக்குப் புடவை?”

பாக்கியம் தலை குனிந்து கொண்டாள்.

“அது.. அந்த பொம்பளையும் அன்னிக்கேதானே செத்துது. அதுக்காகத்தான்..”

எனக்கு கோபத்தில் முகம் சிவந்தது.

“பைத்தியமா நீ? அவ எக்கேடு கெட்டு போறா உனக்கென்ன. உன் புருஷனுக்கு செய்யறதே அதிகம்னு சொல்றேன். நீ அந்தக் கேடு கெட்டவளுக்குச் சேர்த்து திதி கொடுக்கணும்னு சொல்லிறியே.. அறிவிருக்கா உனக்கு..”

பாக்கியம் முனகினாள்.

“அதோட புள்ளைகளும் நல்லா இருக்கணும்னு நினைச்சு தான்”.

“நீ உன் பிள்ளைகள் நல்லா இருக்கணும்னு நினைச்சுக்க. வேண்டாம்னு சொல்லலே. அந்த பொம்பளையோட புள்ளைகள் எங்கே கிடந்து சீரழிஞ்சா உனக்கென்ன?” படபடப்புடன் கேட்டேன்.

பாக்கியம் அவசரமாகத் தடுத்தாள். “அவளோட புள்ளைங்க எங்கியோ இல்லைம்மா. எங்கிட்டே தான் இருக்கு. கண்ணனும், பூங்கொடியும் தான் நான் பெத்த புள்ளைங்க. ஏழுமலையும், வனிதாவும் அவளுக்குப் பொறந்ததுங்க”.

எனக்கு குப்பென வியர்த்தது.

“புருஷன் இறந்துட்டார்னு தெரிஞ்சதும் பதறி ஓடினேன். கண்ணீர் விட்டு கதறி அழுதேன். பின்னர் மனச தேத்திக்கிட்டு, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தொடங்கினேன். அப்ப தான் இறந்தவங்க உடம்ப உறவுக்காரங்க தூக்கிட்டு போனாங்க. ஆனா அந்த பொம்பள உடம்பு மட்டும் அனாதையா, எறும்பு அரிச்சுக் கிடந்தது. யாருமே அக்கறை காட்டலை. ஏழுமலை திருதிருன்னு முழிச்சுக்கிட்டு நிக்கிறான். வனிதா எதுவுமே புரியாம விளையாடிகிட்டு இருக்கு.

எனக்கு மனசு புழிஞ்சு எடுத்த மாதிரி ஆயிடுச்சு. நான் அப்படியே விட்டுட்டு வந்திருந்தா, அந்தப் புள்ளைங்க ரெண்டும் தெருத்தெருவா பிச்சை தான் எடுக்கணும். இல்லாட்டி கெட்டவங்க கையிலே கிடைச்சா சீரழிச்சிடுவாங்க. மனசு கேட்கலை. பெத்தவங்க பண்ணின தப்புக்குப் புள்ளைங்க என்ன பண்ணும்? அதுகளும் என் புருஷனோட ரத்தம் தானே.. அதாங்க என் கூடவே கூட்டிட்டு வந்துட்டேன். நான் குடிக்கிற கஞ்சியை அதுங்களுக்கும் ஊத்தறேன். திருப்தியா இருக்கு” என்றாள்.

வாயடைத்து நின்றேன் நான்! அதுவரை ஒதுங்கி நின்ற கணவர் என் முன்னால் வந்தார்.

“பாக்கியம் உன்னை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலைம்மா. உன் பிள்ளைங்க படிப்புக்கு நான் பொறுப்பு. எனக்கு தெரிஞ்ச டிரஸ்ட் இருக்கு. அவங்ககிட்டே சொல்றேன். முழு பொறுப்பையும் அவங்களே ஏத்துக்குவாங்க. இந்தா.. ஆயிரம் ரூபாய் இருக்கு. இதை வெச்சு திதி செலவு செய். திருப்பிக் கொடுக்க வேண்டாம். என் அன்பளிப்பா வெச்சுக்கோ..” என்றார் தழுதழுத்த குரலில்.

பாக்கியம் கண்களை துடைத்துக் கொண்டாள்.

“ரொம்ப நன்றிங்க அய்யா.. பசங்க படிப்பு செலவ ஏத்துக்கறதா சொல்லுறீங்க. சந்தோஷங்க. ஆனா இந்த ஆயிரம் ரூபா மாத்திரம் கடனாவே இருக்கட்டுங்க. என் புருஷனோட திதி செலவு என் சொந்த பணமாகவே இருக்கட்டுங்க. அப்ப தான் என் மனசுக்கு சமாதானமா இருக்கும். வரேங்க அய்யா, வரேங்க அம்மா..”

கூடையைத் தூக்கிக் கொண்டு நடந்து செல்லும் அந்த பாக்கியத்தைப் பார்த்தபடியே நின்றோம். எங்கள் கண்கள் பனித்தன.

**Original Srilankisches & Indisches Restaurant**


# Sweet Chilli




**100% Halal**
**100% Frisch**
**100% Naturgewürze**
**100% Naturkräuter**



புதிய முகவரியில்
150 ஆசனங்களுக்கும் மேல்




**Rheinische Str. 78**
**44137 Dortmund**
**Tel : 0231 315 46 84**
www.sweetchilli-do.de

அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?






இந்தத் தொடரைச் சில வருடங்களுக்கு முன்னர் அகரத்தில் நாம் தொடங்கிய பொழுது, பலருக்கும் மே மாதம் 2009 முள்ளி வாய்க்கால் படுகொலைகள் நடத்தப்பட்ட பின்னரும், இத்தகைய தேடல் அவசியமா? என்ற கேள்வியே அனைவரையும் மிரள வைத்தது. பலரும் நம்மைக் கேலியும், கிண்டலும் செய்ய வைத்தது.

மனித குல வரலாற்றில் ஒடுக்கப்பட்ட மக்கள் போராட வேண்டிய கட்டாயத்தை எப்பொழுதும் காலம் ஏற்படுத்தியே வருகிறது. மிதி பட்டவர்கள் மீறி மேலே வருவதும், மிதித்தவர்கள் நிலைமாறிக் கீழே போவதும் காலம் செய்யும் லீலைகள்.



## யார் குத்தினாலும் அரிசி வந்தால் எமக்குப் போதும்

இந்நிகழ்வு தனியார் வாழ்விலும், இனங்கள், மதங்கள், நாடுகள் கால ஓட்டத்தில் நாம் காணும் உண்மைகள். வாழ்வே மாயம் என்பதன் பொருளும் இதுதான்.



100 வருடங்களாக உலகம் இனப் படுகொலை என ஏற்க மறுத்து வந்த ஆர்மேனிய மக்கள் படுகொலையை, இன்று பிரான்சும், அமெரிக்காவும் அது இனப்படுகொலையே எனப் பகிரங்கமாகச் சொல்ல வேண்டிய தேவையே ஒழிய, அவை திடீரென நடத்தப்பட்ட கொலைகள் அல்ல. இந்த நாடுகளுக்கு அப்படியான ஒரு பொய்யைத் தொடர்ந்து பேச வேண்டிய தேவைகள் இல்லாமல் போய் விட்டன.

இன்று சிங்களவர்கள் சிலரே தாங்கள் தவறிழைத்து விட்டோம், தங்கள் தலைவர்கள் மிகவும் மோசமானவர்கள் எனப் போராடி, நாட்டை விட்டே துரத்தி விட்டார்கள். இவை புத்த மடத் துறவிகளின் மகா வம்சத்திலும், சூளவம்சத்திலும் எழுதப்படாமல் மறைக்கப் படலாம். ஆனால், மார்ச் 09ஆம் திகதி 2022இல் கொழும்பு காலி முகத்திடலிலும், பாராளுமன்றம் அலரி




மாளிகைகளில் கொழுந்து விட்டெரிந்த தீச் சுவாலைகள் உண்மைகளை மிகத் தெளிவாக உலக வரலாற்றில் பதிவு செய்து விட்டன. இனிமேல் எந்த ஒரு சிங்களவனும் தலை நிமிர்ந்து பேச முடியாத அவமானம் ஏற்பட்டு விட்டது.

இப்படியான நிலையில் சிங்களவனோடு தமிழர் ஒன்றாக வாழ முடியும், வாழ வேண்டும் எனச் சொல்லும் முட்டாள்களைத் தமிழ் இனம், முற்றாக இல்லை என்கிற வரை ஒழித்துக் கட்டவேண்டும். இல்லையேல் தமிழனின் கோவணமும் இல்லாமல் ஆக்கி விடுவார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் வரை அடிமைத் தேசமாக அவதிப்பட்ட கிழக்குத் தீமோர் நாடும், அதன் மக்களும் அப்பிரதேசத்தின் சர்வதேச இராணுவத் தேவைகளின் நிர்பந்தம் காரணமாக சுதந்திரம் வழங்கப்பட்டு, இன்று விடுதலைச் சுகங்களை அனுபவிக்கிறது.

இன்று இலங்கை ஆட்சியாளரின் முட்டாள் தனத்தால் இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற அரசுகளாலும், அவற்றின் பல்தேசிய முதலீட்டாளர்களின் கடன் சுமைகளிலும் சிக்கித் திண்டாடுகிறது. அதனை மீட்கப் புலம் பெயர் தேசங்களில் 50 வருடங்களுக்கும் மேலாக அகதிகளாக வாழ்ந்து வரும் ஈழத் தமிழ் மக்களின் வளங்களை அபகரிக்கப் பலர் திட்டங்களைப் போடுகிறார்கள். அவர்களில் ஜகத் கஸ்பர் போன்ற அருட் தந்தையர்களும் காணப்படுவதுதான் இங்கே கவலை தருகிறது.

எங்களின் தாய் நிலத்தைச் சர்வதேச சட்ட விதிகளுக்கு இசைவான முறையில் நாமே மீட்கும் காலம் வந்து விட்டது. முதலில் இந்தியா, அமெரிக்கா, சீனா தங்களின் போராட்டத்தை நடத்தி முடிக்கட்டும். பின்னர் எங்கள் தமிழ் ஈழம் எமக்கே என்றாகி விடும். சிலவேளை சீனாவின் இராணுவ உளவுக் கப்பலில் எமது தனித் தமிழ் ஈழமும் வந்திருக்கலாம்.எதற்கும் நம்பிக்கைதான் வாழ்க்கை. யார் குத்தினாலும் அரிசி வந்தால் எமக்குப் போதும்.




# Radio - by - Phone

18 ஆம் ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

## 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

மேலதீக விபரங்களுக்கு...
**www.etr.fm**

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music



# என்று முடியும் உக்ரைன் யுத்தம்?

உக்ரைன் போர் 6 மாதங்களைக் கடந்தும் நீடித்து வருகின்றது. இந்தப் போரை ரஸ்யா விரைவாக முடித்துவிடும் என்ற எதிர்வு கூறல்கள் போரின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டு வந்தாலும், உக்ரைனுக்குப் பக்க பலமாக அமெரிக்கா தலைமையில் மேற்குலகு தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து உதவிகளை வழங்கிவரும் நிலையில் உக்ரைனால் தாக்குப் பிடிக்கக் கூடியதாக உள்ளதாக நோக்கர்கள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

போர் ஆரம்பித்த போது மிக வேகமாக முன்னேறிய ரஸ்யப் படைகள் ஓரிரு மாதங்களில் தமது நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. உக்ரைன் தரப்பில் இருந்து மேற்கொள்ளப்படும் எதிர்த் தாக்குதல் காரணமாகவே இந்த மந்தநிலை உருவானதாக ஒருபுறம் கூறப்பட்டாலும், பொதுமக்களின் தேவையற்ற இழப்பைத் தடுக்கும் நோக்குடனேயே தமது படை நகர்வுகள் மெதுவாக நடைபெறுவதாக ரஸ்யப் பாதுகாப்பு அமைச்சர் சேர்கை சொய்கு தெரிவித்துள்ளார்.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான உக்ரைன் மக்கள் இதுவரை அகதிகளாகி உள்ளனர். இவர்களுள் கணிசமானோர் சொந்த நாட்டைவிட்டு வெளியேறி அயல் நாடுகளிலும், மேற்குலகிலும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்த ஆறுமாத கால யுத்தத்தில் ஐயாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டு உள்ளதாகவும், சுமார் 7,000 வரையானோர் காயங்களுக்கு உள்ளானதாகவும் ஐ.நா. தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பொதுமக்களின் இழப்புகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை, பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்படும் வண்ணம் படை நடவடிக்கைகளைத் திட்டமிட்டதாக உக்ரைன் அரசு மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருந்தது. அது மாத்திரமன்றி, சர்வதேச போர் விதிகளுக்கு முரணாக மருத்துவமனைகளைக் கூட உக்ரைன் படைகள் படைத் தளங்களாகப் பாவித்ததாக ஆதாரங்களுடன் தகவல்களை வெளியிட்டு இருந்தது. இந்த அறிக்கையை மறுதலித்த உக்ரைன் அரசு, குறித்த அறிக்கை பாதிப்பை ஏற்படுத்தியவர்களை விட்டுவிட்டு

பாதிக்கப்பட்டவர்களைக் குற்றவாளிகளாகக் காட்சிப் படுத்துவதாகத் தெரிவித்து இருந்தது.

இதேவேளை, போர் தொடங்கியதன் பின்னர் முதல் தடவையாக உக்ரைன் தனது தரப்பு இழப்புகள் தொடர்பான தகவல்களை வெளியிட்டு உள்ளது. தமது தரப்பில் இதுவரை 9,000 வரையான படையினர் இறந்துள்ளதாக தெரிவித்த உக்ரைன் படைத் தரப்பு, ரஸ்யத் தரப்பில் 36,000 வரையான படையினரைத் தாம் கொன்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது. எனினும், ஒருசில மாதங்களுக்கு முன்னர் ரஸ்யா வெளியிட்ட செய்தியில் தமது தரப்பில் 3,600 படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்திருந்தது. மேற்குலகத் தரப்புத் தகவல்கள் சுமார் 15,000 வரையான ரஸ்யப் படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளன.

போரில் முதலில் பலியாவது உண்மையே என்பது உலகப் பொது விதியாக உள்ளது. இரு தரப்பு இழப்புகள் தொடர்பான புள்ளி விபரங்களுக்கும் இந்த விதி பொருந்தும். ஆனால், இந்தப் போரின் எதிர்காலம் எவ்வாறு அமையக் கூடும் என்பதில் கூட மேற்குலகிற்கும் ரஸ்யாவிற்கும் இடையில் வித்தியாசம் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. உக்ரைன் போர் ஆறு மாதங்களைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் அதன் எதிர்காலப் போக்கு என்னவாக அமையும் என்பது தொடர்பில் பிரித்தானிய கார்டியன் பத்திரிகையின் பாதுகாப்புப் பிரிவு ஆசிரியர் டான் சப்பாக் எழுதியுள்ளார். 'உக்ரைன் போர் தொடர்பில் அடுத்த ஆறு மாதங்களுக்கான எதிர்வு கூறல்கள்" என்ற தலைப்பிலான அந்தப் பத்தியில் ஐந்து விடயங்களை அவர் பட்டியலிட்டுள்ளார்.

1. போர் ஒரு வருடமாவது நீடிக்கும். ஆனால், அதன் தீவிரத்தன்மை குறைவடையும். தற்போதைய மந்த நிலை நீடிக்கும்.

2. மரபு ரீதியான எதிர்த் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தும் வல்லமை உக்ரைனிடம் இல்லை. ஆனால், கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் ரஸ்யாவைத் தோற்கடிக்கலாம்.

3. ரஸ்யா தொடர் தாக்குதல்களை நடத்தி முன்னேற விரும்புகிறது. ஆனால், அதன் கவனம் கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் தக்க வைப்பதிலும், பிரதேசங்களை ரஸ்யாவோடு இணைத்துக்






கொள்வது தொடர்பிலும் திரும்பியிருக்கிறது.

4. எதிர்வரும் பனிக் காலம் மற்றுமொரு அகதிகள் பிரச்சனையை உருவாக்கும். இரண்டில் எந்தப் தரப்பு முறையான தயார்படுத்தலைச் செய்கிறதே அந்தத் தரப்புக்கு இந்த விடயம் சாதகமாக அமையும்.

5. போரில் உக்ரைனை வெற்றிபெறச் செய்வதா அல்லது போரைத் தொடர்ந்தும் இழுத்துச் செல்வதா என்பது தொடர்பில் மேற்குலகம் முடிவுக்கு வர வேண்டும். மாபெரும் தேவைகளை நிறைவு செய்யும் மனிதாபிமான உதவி மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தப் பத்தியின் பிரதிபலிப்பாக ரஸ்யாவின் மேனாள் அரசுத் தலைவர் டிமிட்ரி மெட்வெடேவ் ஒரு கருத்தைப் பதிவு செய்துள்ளார். அவரைப் பொறுத்தவரை இரண்டே இரண்டு தெரிவுகளே உக்ரைனுக்கு உள்ளன. ரஸ்யாவுடன் பேச்சுக்களை நடாத்த தற்போதைய அரசாங்கம் மறுத்துவரும் நிலையில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். அல்லாவிடில் தற்போதைய அரசாங்கமே தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும். மோதலை முடிவுக்குக் கொண்டுவர இதைவிட வேறு மாற்று வழிகள் இல்லை என்பது அவரது நிலைப்பாடு.

உக்ரைன் போரினால் இன்று முழு உலகுமே ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டு உள்ளது என்பது மிகைப்படுத்தப்பட்ட கருத்து அல்ல. உலக மாந்தர் பெரும்பாலானோரின் விருப்பம் இந்தப் போர் வெகு விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்பதுவே. ஆனால், போரில் ரஸ்யாவும் உக்ரைனும் நேரடியாக ஈடுபட்டுக் கொண்டிருக்க, பின்னணியில் இருந்து கொண்டு தமது நலன்களை நிறைவேற்றிக் கொள்ள மேற்குலகு செயற்பட்டு வரும் நிலையில் போர் தொடர்ந்து நீடிக்கும் அறிகுறிகளே பிரகாசமாக உள்ளன என்பதே யதார்த்தம்.





Melliyalsarees
DORTMUND
தமிழர் திருவிழா
2022 இல்
மெல்லியள்
சாரிஸ்
மலிவு
விற்பனை
02.09.2022
Fr. 16:00 Bis 00:00
03.09.2022
Sa. 11:00 Bis 00:00
04.09.2022
So. 12.00 Bis 19:00
+49 176 24650540
Rheinische Strasse 29

**‘உலகில் பலர் காதலிக்காமல் வாழ்ந்து மடிந்து இருக்கலாம். ஆனால் நீர் இல்லாமல் ஒருவரும் வாழ்ந்து விட முடியாது‘**

**- உலக கவிஞர் ஹோடன்**

குடுவையில் அடைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட ஒரு லீற்றர் குடிநீரின் சராசரி விலை ஐரோப்பாவில் 0.80 யூரோ. சிறிலங்காவில் 280 ரூபா. தமிழகத்தில் சுத்திகரிக்கப்பட்ட அம்மா மலிவு விலை குடிநீரின் விலை ரூ.10. இது நமக்கு தெரியும். ஆனால், எத்தனை பேருக்கு மறை நீர் ***(Virtual water)*** விலை தெரியும்?

மறை நீர் என்பது ஒர்வகை பொருளாதாரம். மொத்த உள்நாட்டு உற்பத்தியை ***(Gross domestic product)*** ஒர் நாட்டின் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவதுபோல ஒர் நாட்டின் நீர் வளத்தை கொண்டு மதிப்பிடும் தண்ணீர் பொருளாதாரம் இது. இதை கண்டுபிடித்தவர் இங்கிலாந்தை சேர்ந்த பொருளாதார வல்லுநர் ***John Antony Allen.*** இந்த கண்டுபிடிப்புக்காக ***‘Stockholm Water -2008’*** விருது பெற்றவர்.

ஓர் பொருளுக்குள் மறைந்திருக்கும் கண்ணுக்கு தெரியாத நீர் - இதுவே மறை நீர். இது ஓர் தத்துவம், பொருளாதாரம். ஒரு மெற்றிக் தொன் கோதுமை 1,600 கியூபிக் மீற்றர் தண்ணீருக்கு சமம் என்கிறது மறைநீர் தத்துவம். மறை நீர் என்பதற்கு அலன் தரும்

| | |
|---|---|
| ஒரு *A4* அளவு கடதாசித்தாள் | - 11 லிற்றர் தண்ணீர் |
| ஒரு லிற்றர் சுத்திகரிக்கப்பட்ட பாட்டில் தண்ணீர் | - 5 லிட்டர் தண்ணீர் |
| ஒரு குடுவை ***Beer*** | - 74 லிட்டர் தண்ணீர் |
| ஒரு ***Burger*** | - 2500 லீற்றர் தண்ணீர் |
| ஒரு குடுவை பால் | - 208 லிற்றர் தண்ணீர் |
| ஒரு குவளை திராட்சை மது | - 118 லிற்றர் தண்ணீர் |
| ஓர் சோடி காலணி | - 7770 லீற்றர் தண்ணீர் |
| ஓர் அரைக்கை மேலங்கி | - 1960 லிற்றர் தண்ணீர் |
| ஓர் காற்சட்டை ***(Jeans)*** | - 6660 லீற்றர் தண்ணீர் |
| 1.1 தொன் எடையுள்ள மகிழுந்து | - 4 லட்சம் லீற்றர் தண்ணீர் |

# (Virtual Water)

# மறை நீர்

## மறைந்திருக்கும் நீர் அரசியல்



விளக்கம், "கோதுமை தானியத்தை விளைவிக்க நீர் தேவை. ஆனால், அது விளைந்தவுடன் அதை உருவாக்கப் பயன்பட்ட நீர் அதில் இல்லை. ஆனால், அந்த நீர், கோதுமை தானியங்களுக்காகத் தானே செலவிடப்பட்டிருக்கிறது அல்லது மறைந்திருக்கிறது. இதுவே மறை நீர். கோதுமை தேவை அதிகம் இருக்கும் ஒரு நாடு, ஒரு மெட்ரிக் தொன் கோதுமையை இறக்குமதி செய்யும்போது, அந்த நாடு 1,600 கியூபிக் மீற்றர் அளவுக்குத் தனது நாட்டின் நீரைச் சேமித்துக்கொள்கிறது" என்கிறார் ஆலன்.

## புத்திசாலி நாடுகள்!

நீரின் தேவையையும் பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுக்க வேண்டும். சீனா, இசுரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன. சீனாவின் பிரதான உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கான மறை நீர் தேவை 5,988 லீற்றர். அதனால், சீனாவில் பன்றி உற்பத்திக்கு கெடுபிடி அதிகம். ஆனால், தாராளமாக இறக்குமதி செய்துகொள்ளலாம். ஒரு கிலோ ஆரஞ்சுக்கான மறை நீர் தேவை 560 லீற்றர். சொட்டு நீர் பாசனத்தில் கோலோச்சும் இசுரேலில் ஆரஞ்சு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு கெடுபிடிகள் அதிகம். இவ்விரு நாடுகளும் ஒவ்வொரு பொருளுக்குமான மறை நீர் தேவையைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுத்துள்ளன.

## இது இந்திய நிலவரம்!

முட்டை உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது மகாராட்டிரம். நாமக்கல்லுக்கு இரண்டாவது இடம். நாமக்கல்லில் ஒரு நாளைக்கு மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில் 70 லட்சம் முட்டைகள் தினசரி வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 4.80 கோடி டொலர்கள் அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

## மூன்று ரூபாய் முட்டைக்கு 196 லீற்றர் மறை நீர்

வளைகுடா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் தண்ணீர் பற்றாக்குறை கொண்டவை. ஐரோப்பிய நாடுகள் மறைநீர் தத்துவத்தைப் பின்பற்றுபவை என்பதை இங்கு கவனிக்க வேண்டும். சரி, சராசரியாக 60 கிராம் கொண்ட ஒரு முட்டையை உற்பத்தி செய்ய 196 லீற்றர் மறை நீர் தேவை. மூன்று ரூபாய் முட்டை 196 லீற்றர் தண்ணீரின் குறைந்தபட்ச விலைக்குச் சமம் என்பது எந்த ஊர் நியாயம்?

முட்டையினுள் இருக்கும் ஒரு கிராம் புரதத்துக்கு 29 லீற்றர் மறை நீர் தேவை. ஒரு கிலோ கோழிக் கறி உற்பத்திக்கான மறை நீர்த் தேவை 4,325 லீற்றர்.

ஏன் உலக நாடுகள் இங்கிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். அங்கு இல்லாத தொழில் நுட்பமா, அங்கு இல்லாத வளங்களா, அங்கு இல்லாத எந்திரங்களா? பிறகு ஏன் உலக நாடுகள் ஆசிய நாடுகளில் கடை போடுகின்றன. காரணம் தங்கள் வளங்களின் மீது அவர்களுக்குள்ள அக்கறை. அவற்றை பாதுகாக்க ஆரம்பித்து விட்டார்கள். மனித வளச் சுரண்டலையும், இயற்கை வளச் சுரண்டலையும் செய்ய அவர்கள் இந்தியாவைத் தேர்ந்தெடுத்துவிட்டனர். நாம்தான் வளங்களை வாரிக் கொடுப்பதில் வள்ளல்கள் ஆயிற்றே.

நாம் ஏற்றுமதி செய்யும் பொருட்களால் நமக்கு கணிசமான பொருளாதார வளர்ச்சி இருந்தாலும் கூட, நாம் பொருட்களை ஏற்றுமதி செய்யவில்லை. மாறாக பொருட்களின் வழியே பல கோடி லீற்றர் தண்ணீரையே ஏற்றுமதி செய்கிறோம்.

நம் கண்ணுக்குத் தெரியாமலேயே நாமே நம் நீர் ஆதாரங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். தண்ணீர் அதிகம் தேவைப்படும் பெரும்பாலான

பொருட்களை உலக நாடுகள் நம் நாட்டிலிருந்துதான் உற்பத்தி செய்து இறக்குமதி செய்துகொள்கின்றன.

மேலும் அந்தப் பொருட்கள் இங்குள்ள எல்லோருக்குமானவையாகவும் இல்லை என்பது மற்றொரு சோகம். பணம் படைத்தவர்கள்தான் ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். தண்ணீர் திருடு போவதோ, தண்ணீரைக் காசு கொடுத்து வாங்குவதோ பெரும்பாலானோருக்கு ஒரு விடயமாகவே தெரியவில்லை. அந்த வகையில் எளிய மக்கள் முட்டாளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பது சோகம்.

## தண்ணீருக்கு எங்கு கணக்கு?

ஒரு பொருளின் விலை என்பது அதன் எல்லா செலவுகளையும் உள்ளடக்கியது தானே? அப்படி எனில், பெரும் நிறுவனங்கள் எல்லாம் தண்ணீருக்கு மட்டும் ஏன் அதன் விலையை செலவுக் கணக்கில் சேர்ப்பது இல்லை. ஏனெனில், நம்மிடம் இருந்து இலவசமாகத் தண்ணீரைச் சுரண்டி நமக்கே கொள்ளை விலையில் பொருட்களை விற்கின்றன அந்நிறுவனங்கள்.

இப்படி எல்லாம் முட்டையில் தொடங்கி மகிழுந்து வரைக்கும் கணக்கு பார்த்தால் நாட்டின் வளர்ச்சி என்னவாவது? நாம் என்ன கற்காலத்திலா இருக்கிறோம் என்கிற கேள்விகள் எழாமல் இல்லை. கண்ணை மூடிக்கொண்டு பொத்தாம்பொதுவாய் ஏற்றுமதி, இறக்குமதி செய்ய வேண்டாம் என்கிறது மறை நீர் பொருளாதாரம்.

மறை நீருக்கு மதிப்பு கொடுத்திருந்தால் உலகின் பணக்காரர்களிடம் பட்டியலில் என்றோ இடம் பிடித்திருப்பான் விவசாயி. இனியாவது நாம் மறை நீர் தத்துவத்தை உணர வேண்டும்.




CENTURY
TRAVELS

# SUMMER 2022

## Frankfurt Direct Flights




**இந்தியாவுக்கான விசா**
**ஒழுங்கு செய்து தரப்படும்**



## 5 STAR SERVICE

**சிறப்பு சலுகை விலை**

**MÜNCHEN COLOMBO**
**BERLIN COLOMBO**

| திகதி மாற்றம் இலவசம் | 4 கிழமைக்குள் பணம் திருப்பித் தருதல் | இலங்கை விசா ~~60~~ 40 |
|---|---|---|
| Date Change FREE | Refund Within 4 WEEKS | Srilanka Visa ~~60~~ 40 |

பதிவேற்றம் (Declaration Form)
Self Declaration Form
**Corona Travel Information**



**Nishanthan 0176 2168 2149**

0231 58 96 557 | 0231 55 74 319

Rheinische Str.29-44137-Dortmund | www.centurytravels.de | info@centurytravels.de


V BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED
IN GERMANY.
SUPER
SALE
IN GERMANY
119 €
CALL
ONLY
+49 1514 6978484